
www.padippakam.com

# புதியதடம்



இதழ் எண் 8 நன்கொடை ரூ.10

படிப்பகம்

www.padippakam.com



# துரோகத்தின் சம்பளம்

## டாடா சுமோ

எங்கள் கண்ணீரைப் போலவே
நாங்கள் சிந்திய ரத்தத்திற்கும்
நீண்ட வரலாறுண்டு

சுதந்திரத்தின் பெயராலும்
சனநாயகத்தின் பெயராலும்
அதற்கு முன்
மன்னர்களாலும்
மடாதிபதிகளாலும்
எங்கள் உயிர் பறிக்கப்பட்டதற்கும்
நீண்ட வரலாறுண்டு
அது
தொடரும் வரலாறு
துரோக வரலாறு

அன்றெங்களை
காந்தியம் பேசியவன்
அந்நியனிடம் அடகு வைத்தான்
கம்யூனிசம் பேசியவன்
பாராளுமன்றத்திற்குள்
கொண்டு விட்டான்
திராவிடம் பேசியவன்
தில்லியிடம் விட்டு வைத்தான்
இன்று
தலித்தியம் பேசுபவன்
ஐயாக்களிடம்
அடமானம் வைக்கிறான்.
தொடர்கிறது
துரோக வரலாறு

மக்களெனும் கடலினுள்
மீன்களாய் இருங்கள்
என்றொரு சீனன் சொன்னானாம்
எங்கள் தலைவர்களோ
புழுக்களாய் மாறி
தூண்டிலில் மாட்டுப்பட
துடியாய்த் துடிக்கிறார்கள்.
எது நல்ல தூண்டில் ?
கோபாலபுரம் ?
போயஸ் கார்டன் ?
கபிஸ்தலம் ? இம்மூன்றில்
எதில் மாட்டுப்பட்டாலும்
பாராளுமன்ற ஆக்டோபஸ்க்கு
இரையாவது உறுதி.
இல்லை இல்லை
கபிஸ்தலமும் போயஸ்கார்டனும்
தலித்துகளது புண்ணியதலங்கள்
என்று சத்தியம் செய்கிறார்கள் எம்
தலைவர்கள்.
தொடர்கிறது துரோக வரலாறு

நாங்கள்
அதிகாரத்திற்கு அடங்க மறுத்தோம்
அடித்துத் தாமிரபரணியில் வீசினர்
ஆதிக்க அத்துக்களை மீறினோம்

மேலவளைவில் வெட்டியெறிந்தார்கள்.
ஆனால்
திமிறியெழு என வசனம் பேசிய
எம் தலைவர்
ஐநூறு வேலி ஐயாவிடம்
அடங்கிப்போனார்.

திருப்பியடி என சவாலடித்த
பெருந்தலைவர்
தாமிரபரணிக் கரையில்
பச்சை ரத்தம் குடித்த
கொலை வெறியனோடு
கூடிக் குலாவுகிறார்
அநாதரவாய் நாங்கள்
தொடர்கிறது
துரோக வரலாறு

அன்று வெண்மணியில் வெந்தோம்
கம்யூனிஸ்டுகளுக்கு சீட்டு கிடைத்தது
இன்று மேலவளவில் வெட்டுப்பட்டோம்
தலைவருக்கு அம்மாவின்
ஆசி கிடைத்தது.
தாமிரபரணியில் உயிரை விட்டோம்
தலைவருக்கு ஐயா வின் கூட்டு கிடைத்தது
இனி
ஐ யும் எம் மும்
தூக்கித் திரிந்த துரோகக் காவடியை
இவர்களின் தோள் மாற்றிக் கொள்வார்கள்
தொடரட்டும்
துரோக வரலாறு

அன்று
ஆண்டையின் அரிப்புக்கு
ஆள்பிடித்தான் கங்காணி
கிடைத்தது
எச்சித் தண்ணியும்
எலும்புத் துண்டும்
இன்று
அண்ணாவின் ஆட்சிக்கும்
காமராசர் ஆட்சிக்கும்
ஆள் பிடிக்கிறார்கள்,
கிடைத்தது
சுமோ காரும் செல் ஃபோனும்
மினரல் வாட்டரும் ஃபைவ் ஸ்டார் ஓட்டல்
தந்தூரிச் சிக்கனும்.

எங்கள்
கண்ணீரை
ரத்தத்தை
உயிரை
வாழ்க்கையை
விடுதலையை
விலை பேசுகிறார்கள்.
தொடர்கிறது
துரோக வரலாறு

இமையவேல்

படிப்பகம்

www.padippakam.com




# புதியதடம் - 8

அக்டோபர் 2000

◆

வெளியீடு

சமூக விஞ்ஞானப் பயிலகம்
தமிழ்நாடு

◆

ஆசிரியர் குழு

வரதன் கருணாகரன்
ரமேஷ் ராஜா
வாகஹ்ரி சுபசித்திரன்

◆

தொகுப்பு

மேகவண்ணன்

◆



முகவரி

44, லெட்சுமண தீர்த்தம் தெரு
இராமேஸ்வரம் - 623 526
தமிழ்நாடு

◆

தொலைபேசி

04573 - 22482
22456

◆

மின்னஞ்சல் முகவரி

puthiyathadam@yahoo.com



◆

தனிஇதழ் ரூ. 10/-
2 ஆண்டு சந்தா ரூ. 100/-

◆

நன்கொடைகளை
M. MURUGESAN என்ற பெயரில்
M.O அல்லது D.D யாக அனுப்பவும்.

◆

முன் அட்டை புகைப்படம்
விஸ்வாமித்திரன்

◆

பின் அட்டை ஓவியம்
மருது


தோழர்களே,

புதியதடம் 7-வது மற்றும் 8-வது இதழ்களுக்கான கால இடைவெளிகளில் நிகழ்ந்தவை பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கிறோம்.

7-வது இதழ் பற்றிய விமர்சனக் கூட்டம் ஒன்றை சிறு அளவில் நடத்தினோம். தலையங்கம். கவிதை முதலான படைப்புகள் தெளிவாகவும், எளிமையாகவும், முழுமையாகவும் எழுதப்பட வேண்டும் என்ற விமர்சனம் ஒரு சிலரால் பதிவு செய்யப்பட்டது. வழக்கமான தொனியில் படைப்புகள் வரவேண்டுமென்பது அநேகரின் விருப்பமாக எதிர் நிலையில் பதிவானது. சிறு இதழ்களுக்கான தளத்தில் பண்ணையார்த்தனத்தையும், தரகு முதலாளியமாகவும் ஊடுருவியுள்ள காலச்சுவடு, விசை, ஆரண்யம், காலக்குறி முதலான ஹைடெக் இதழ்களுடன் போட்டியிடவேண்டிய துர்பாக்கிய நிலைக்கு உண்மையிலே சிறுபத்திரிக்கைகளாக இருப்பவை தள்ளப்பட்டுள்ளன. எனினும் வாசிப்பின் அசௌகரியம் கருதி லே-அவுட், வடிவமைப்பு, எழுத்துத் தேர்வு, இதழ் கட்டமைப்பு ஆகியவற்றில் சற்று கூடுதல் கவனத்துடன் இதழ் தயார் செய்யப்பட்டுள்ளது.

திரைப்பட அரங்கொன்றினை ராமேஸ்வரத்தில் நடத்தினோம். அது குறித்து நண்பர்கள் மனோஷும் ஹவியும் விரிவாக எழுதியுள்ளனர். எனினும் முளைக்கொட்டு போல திரைப்படம் போடுகிறார்கள் என்றொரு விமர்சனத் தரவு. அது குறித்துச் சொல்ல வேண்டும். மக்கள் சினிமா மாதிரி திரையரங்கைப் போன்று மாற்றங்களுக்கான அக்கறையுடன் சினிமா அரங்குகளைக் கொண்டு முளைக்கொட்டுத் திருவிழாக்கள் நிகழ்த்தப்படுமாயின் நாங்களும் முளைக்கொட்டுத் திருவிழாக்களில் பங்குகொள்ளத் தயாராகவே இருக்கிறோம். மாறாக இந்துத்துவச் சடங்கு முறைகளிலும், கொண்டாட்டங்களிலும் பங்கு கொண்டு அவற்றில் பானக்கம், மோர் ஊற்றி ஊக்குவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நமது செயல்பாடுகள் பற்றி விமர்சிப்பதற்கான எந்தவித உரிமையையும் நாம் வழங்க முடியாது. மக்களின் எதிரிகளிடம் ஜனநாயகமாக நடந்து கொள்ளும்படி மார்க்சியம் நமக்குக் கற்றுத் தரவில்லை. ராமேஸ்வரத்தில் தபசு மண்டகப்படி, தெப்பத் தேரோட்டம், விரைவில் வரும் கும்பாபிஷேகம் என்று அவர்களுக்கு நிறைய வேலைகள் இருக்கும். நாம் தொந்தரவு செய்ய வேண்டியதில்லை.

சமகாலத்தில் கலாச்சாரத் தளத்தில் நிகழ்ந்த சில விஷயங்கள் பற்றிய விமர்சனங்கள் இவ்விதழில் தோழர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன. ராமேஸ்வரம் கலைஇரவு, வெற்றிக்கொடிகட்டு, மாயி திரைப்படங்கள் இப்படி செறிவு மிகுந்த கட்டுரைகள் எழுதப்படுவதற்கான தேக்கத்தையும், இடைவெளிகளையும் கவிதைகள் நிறைவு செய்கின்றன. முன்னெப்போதையும்விட மூச்சுத் திணறுமளவுக்கு கவிதைத் தரவுகள் நமக்குக் கிடைத்து வருகின்றன. நூல்கள் பற்றிய விமர்சனங்கள் வெளியிட்டு நாட்களாகின்றன. நூல் விமர்சனம் போன்ற விஷயங்களில் ஆர்வமுள்ள தோழர்கள் புதியதடத்திடம் வந்துள்ள நூல்களைப் படித்து தங்கள் கருத்துக்களை எழுதலாம். ஆர்வமுடன் படைப்புக்கள் அனுப்பி வரும் அருகிலுள்ள தோழர்கள் தவிர புதுவையின் தலித் சுப்பையா, இலக்குமி குமாரன் ஞானதிரவியம், ஏழுமலை, தய்.கந்தசாமி V.G.K, இதழ் தயாரிப்பில் உதவிய O. உமாநாத், இதழ் வெளிவருவதற்கான பங்களிப்பைச் செய்த நீதா, ஷோபாசக்தி, மார்னா, சரவணன், ஜெகன், ராமு, மற்றும் சந்தா அனுப்பி உதவிய நண்பர்களையும் இங்கே நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

- ஆசிரியர் குழு

படிப்பகம்

நன்கொடைகளை எதிர்பார்க்கிறோம். நன்றி.

www.padippakam.com



# கலைஇரவு 2000

## பார்வையாளன்

கம்யூனிஸ்டுகளின் கலைஇரவு
Sponsered by
உள்ளூர் நிலப்பிரபு

என்கிற கனல் எழுதிய கவிதையை மறுபடி நினைவூட்டும்படியாக நடந்து முடிந்திருக்கிறது, த.மு.எ.ச-வின் கலைஇரவு 2000.

முற்போக்குக் கலை இலக்கியத்தைத் தூக்கிக் கொண்டு மற்ற எல்லோரையும் விட முன்னுக்கு ஓடுபவர்கள் த.மு.எ.ச-வினர்தான். ஆதனால்தான் தம் கலை இரவை சின்னஞ்சிறு பெண் போலே . . . சிற்றாடை இடை உடுத்தி . . . சிவகங்கைக் குளத்தருகே . . . என்ற பக்திப் பாடலின் நாதஸ்வரப் பீற்றலோடு துவக்கினார்கள். பின்னர் அதே நாதஸ்வர வாய் கொஞ்சம் சலங்கையிலிருந்து அச்சுக் கலையாத ஒரு அக்மார்க் இந்திய நிலவுடமைக் கர்னாடக சங்கீதச் சேற்றிலிருந்து ஒரு பீஸ் எடுத்து விட்டது. இப்படியாக கலை இரவின் துவக்கத்திலேயே நமது முற்போக்கு ரோமங்களையெல்லாம் எழுந்து சலாம் போட வைத்து விட்டார்கள்.

கலை இரவு அரங்கத்துக்கு தமிழரங்கம் என்று பேர். நாட்டில் எந்த விஷயமும் மக்களின் உணர்வு ரீதியான வீச்சைப் பெறும்போது அதை எடுத்துவைத்துக் கொண்டு தங்களது கட்சிக்கு ஏதாவது தேறுமா என்று கணக்குப் போடும் இடதுசாரி இயல்புக்கு 2000-ல் தமிழரங்கம் என்ற பதம் பயன் படுகிறதுபோல. தமிழ் வழிக் கல்விக்கு எதிரான முழக்கம் என்று முன்னேற்பாடான வர்ணனையோடு மதுக்கூர் ராமலிங்கம் பேச வந்தார். தீக்கதிர் ஆசிரியர் என்பதால் ஜோக் புத்தகங்கள் படிக்க நேரம் கிடைக்கும் போலிருக்கிறது. அதில் நாமெல்லாம் படித்துப் புளித்த ஜோக்குகள் சிலவற்றை தமிழ்வழிக் கல்வியின் அவசியம் என்ற தலைப்பில் உதிர்த்தார். பிறகு த.மு.எ.ச தமிழ்வழிக்கல்வியை கட்டாயப்படுத்தி அரசை நிர்ப்பந்திக்க என்னென்ன போராட்டங்கள் நடத்தப் போகிறது என்று பட்டியல் போட்டார்.

இதில் நமக்கு ஒரு கேள்வி இருக்கிறது. இடதுசாரி அமைப்பிலுள்ளவர்கள், தமுஎச, போன்ற அமைப்பிலுள்ள ஏராளமான உறுப்பினர்கள் தங்கள் குழந்தைகளை கான்வென்டுகளில் படிக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இடதுசாரிகளின் அமைப்பாக்கப்பட்ட தொழிற்சங்கங்களின் அநேக பிரதிநிதிகளின் குழந்தைகள் கான்வென்டுகளில் படித்துக்கொண்டிருக்கின்றன. பின்னர் யாருக்காக நீங்கள் தமிழ் மொழிக்கல்வியின் முக்கியத்துவம் குறித்துப் பேசுகிறீர்கள்?

தமிழா நீ பேசுவது தமிழா ? என்று தொடங்கும் கவிஞர் காசி ஆனந்தனின் பாடலை திருவுடையான் பாடினார். அதில் எந்த இடத்திலும் இது தானே இயற்றிய பாடல் அல்ல. இது காசி ஆனந்தனுடையது என்று குறிப்பிடப்படவில்லை.

மாற்று அமைப்பினுடைய பாடல்களைச் சுவீகரிக்கிறீர்கள் (களவாடுகிறீர்கள்). அதன் படைப்பாளிகளுக்குரிய அங்கீகாரத்தை அபகரித்து ஒரு நிலப்பிரபுவின் தொனியில் மறுக்கிறீர்கள்.

பின்னர் பொதுவுடமைச் சமூகம் ஆவதற்குத்தான் இப்படியெல்லாம் வம்பாய்க் கிடந்து சாகிறோம் என்கிறீர்கள். அப்படியென்றால் நீங்களே சொல்லுங்கள். முற்போக்கு என்றால் என்ன ? கலை என்றால் என்ன? இலக்கியம் என்றால் என்ன?

எமக்குத் தெரிந்து சனாதனத்தை அங்கீகரித்து, சாதியத்தின் இருப்பை அங்கீகரித்து மதங்கள் மனிதர்களை வாழவைக்கத்தான் தோன்றின என்ற கருத்தை அங்கீகரித்த ஒரே கம்யூனிஸ்ட் கட்சி உலகத்திலேயே நமது த.மு.எ.ச- விற்குப் பின்னால் இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாகத்தான் இருக்கும்.

அழைப்பிதழில் கலை இரவின் விளம்பர ஓவியங்களை வரைந்தவர் எங்கள் ரவிவர்மா என்று ஜோதிபாசு என்று போட்டிருக்கிறீர்கள். ரவிவர்மா என்ற இந்துக் கடவுளர்களின் உருவங்களைச் சிருஷ்டித்த ஒரு ஓவியனை ஜோதிபாசுவுடன் ஒப்பிடுகிறீர்கள். அப்படியானால் இந்துக் கடவுளர்களின் படங்களை வரையும் ரவிவர்மாவுக்கும் முற்போக்கு கலைஇரவு ஓவியங்களை வரையும் திரு. ஜோதிபாசு அவர்களுக்கும் ஒரே சிந்தனைத் தளத்தை கற்பிக்க முயற்சி செய்கிறீர்களா? அல்லது அதுதான் உண்மையா ?

மருத்துவர்குலம் என்ற அடித்தட்டு சாதியின் சமீபகால வளர்ச்சியில் அவர்கள் தோற்றுவித்த விஸ்வநாததாஸ் இளைஞர் பேரவை, அவர்களின் விஸ்வநாததாஸ் கலைக்குழு இவைகள் கூட சாதியத்திற்கு எதிரான கறாரான புனைவுகள் எதையும் முன்வைக்காமல் வெறுமனே "தயவு செய்து யாரும் அடித்துக் கொள்ளாதீர்கள்" என்ற த.மு.எ.ச வின் சமாதான சகவாழ்வு ஸ்கிரிப்டை முன் வைப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இப்படி எல்லாச் சக்திகளையும் இழுத்துப் போட்டுக் காயடித்துவிடுகிற பலம் இடதுசாரிக் கலைஇலக்கிய அமைப்புகளைத் தவிர்த்து வேறு எங்கும் இருக்க முடியாது.

கவிதை வாசிக்க வந்தவர்களில் புதியவர்களான இராமேஸ்வரக் கவிஞர்கள் த.மு.எ.ச வும் CPM மும் தங்களுக்குக் கற்றுத் தந்த அரசியலைக் கவிதையாக்கி வெளிப் படுத்த முனைந்தார்கள். அதில் CPM - ன் அரசியல் நிலைப்பாடு களுக்குண்டான விமர்சனங்கள் முற்றாகப் பொருந்தக்கூடியவை. ருத்ரபாரதியின் கவிதை ஒரு அனல்வீச்சு போல இருந்தது. இப்படியே நாங்கள் பொறுத்துக் கொண்டே போக மாட்டோம். பொங்கி எழுவோம். அடிக்கு அடி கொடுப்போம் என்று கவிதை வார்த்தைகளில் சொன்னார். வெண்மணியில் குடும்பம் குடும்பமாக எரிந்தபோதிலிருந்து நாம் கேட்டு வருகிற வார்த்தைகள் தான் இவை. ஆனால் அடிக்கு அடி கொடுத்த வரலாறுதான் நாம் இதுவரை கேள்விப்படாதது. இவர்களின் கலை இரவுகளை முளைக்கொட்டுத் திருவிழாபோல வருடா வருடம் பார்த்துப் பார்த்து அலுவ புதிதாக எதுவும் நமக்குக் கற்றுத் தரவில்லை. எனவே போரடிக்கிற தமிழ் சினிமாவைப் போல ஒன்றரை மணிக்கு எனக்குத் தூக்கம் வந்து விட்டது. ஒன்றரை மணிக்குப் பிறகு ஏதேனும் முற்போக்கு முத்துக்கள் உதிர்ந்திருந்து அதை நான் இதில் குறிப்பிடாமல் விட்டிருந்தால் த.மு.எ.ச-வினர் என்னை மன்னிக்கட்டும். ●

படிப்பகம்

www.padippakam.com



# இந்துத்துவ தந்திரங்கள்

_ சில செய்திகள்.

குமரன்தாசு

சமீபத்தில் பாரதீய சனதா கட்சிப் பொதுக் கூட்டமொன்றில் தமிழக பா.ஜ.க. தலைவர் திரு. கிருபாநிதி கலந்து கொண்டபோது அக்கட்சியின் மாவட்டச் செயலாளர் பொதுக்கூட்ட மேடையில் நேரிடையாகக் கேள்வி எழுப்பினார். எந்த தமிழகக் கட்சியிலாவது இதுவரை ஒரு தாழ்த்தப்பட்டவர் தலைவராக ஆக்கப் பட்டிருக்கிறாரா? நாங்கள் ஆக்கியிருக்கிறோம் என்று கிருபாநிதியைச் சுட்டிக்காட்டினார். அம்மேடையில் சிறப்புப் பேச்சாளரும் அவரே. தமிழக பா.ஜ.க தலைவராக இருந்தும் கிருபாநிதி வெறும் அழகுப் பொம்மையாக வந்து போனார் என்றே சொல்ல வேண்டும்.

மற்றொரு செய்தி பா.ஜ.க. வின் அகில இந்தியத் தலைவர் குஷாபாவ் தாக்கரே பதவிக்காலம் முடிவுற்றதை அடுத்து திரு. பங்காரு லெட்சுமணன் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் ஒருவரை பா.ஜ.க. வின் அகில இந்தியத்தலைவராக அக்கட்சி தேர்வு செய்துள்ளது. கூடவே கடந்த 20 வருடங்களில் ஒரு தாழ்த்தப்பட்டவர் பா.ஜ.க. தலைவராவது இதுவே முதல் முறை என்றும் தினசரிகளில் செய்தி வெளியானது.

இவ்வாறு ஒரு பார்ப்பனீயக் கட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களை தலைவர்களாக தேர்ந்தெடுப்பது என்பது ஒன்று. அக்கட்சி தன் பார்ப்பனீய நலனை, தன்மையை கைவிட்டுவிட்டது என்பதைக் காட்டுகிறது.அல்லது மற்றது இன்றைக்கு தலித் அமைப்புக்கள் முன்வைத்து வரும் தலித் தலைமை என்ற அரசியலின் முக்கியத்துவத்தை சிதைத்து ஒன்றுமில்லாதாக ஆக்குவதற்கான தந்திர நடவடிக்கை என்று கொள்ளலாம்.

பா.ஜ.க தன் இந்துத்துவ - பார்ப்பனீய நலனை கைவிடும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் பார்ப்பனீய நலனை கைவிடுவது என்றால் பா.ஜ.கட்சியையே கலைத்து விடலாம். மேலும் சங் பரிவார் என்பது பரந்து விரிந்த ஓர் அமைப்பு இந்து முன்னணி, RSS, ABVP, VHP, . . . என்ற பரந்த கட்டமைப்பில் பா.ஜ.க என்பது மக்களை மயக்கிச் செல்வாக்குப் பெறுவதற்கான சனநாயக முகமூடியே ஆகும். அத்தகைய முகமூடியே தாழ்த்தப்பட்ட ஒருவரை தலைவராக்கியது.

இன்றைய சமூக நிலவரத்தைக் கணக்கிட்டு, தேவையை முன்னிட்டு கிருபாநிதியையும், பங்காரு லெட்சுமணனையும் முன்னுக்குக் கொண்டு வருகின்றனர். அதாவது ஆதிக்க சாதியினரின் கட்சி, முன்னாள் மன்னர்களின் கட்சி, பார்ப்பனர்களின் கட்சிதான் BJP என்ற விமர்சனத்தை உடைத்து தலித்துக்களையும் பிற ஒடுக்கப்பட்ட மக்களையும் ஏமாற்ற மேற்கொள்ளப்பட்ட தந்திர நடவடிக்கையே இது.

இந்த தந்திரம் என்பது இந்திய துணைக்கண்ட அரசியலுக்கு ஒன்றும் புதியதல்ல. ஏற்கனவே நாம் பலமுறை பார்த்து வந்ததுதான். இந்தியக் குடியரசுத் தலைவராக ஒரு தலித்தைக் கொண்டு வருகிறோம் என்று திரு. K.R. நாராயணனை இவர்கள் கொண்டு வந்து நம்மை ஏமாற்ற முயற்சித்தபோதுதான் ஒரு தலித் பஞ்சாயத்துத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக வெட்டிக் கொல்லப்பட்டார். அமைதியான முறையில் ஊர்வலம் சென்று கலெக்டரிடம் மனுக் கொடுக்க முயன்ற மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் தலித் அமைப்பான புதிய தமிழகம் பின் திரண்ட காரணத்திற்காகவே அநியாயமாக 17-க்கும் மேற்பட்டவர்கள் அடித்துக் கொல்லப்பட்டனர். இன்றும் இங்கு தேர்வடம் தொட தலித்துக்களுக்கு உரிமையில்லை.

அதாவது இந்தியத் துணைக்கண்ட அரசு, கட்சிகள் என்னதான் சாதிமத்ச்சார்பின்மை பற்றி வாய்ச்சவடால் அடித்தாலும் சமூக நடைமுறை என்பது சாதி ஆதிக்கமும் ஒடுக்குமுறையும் நிலவுவதைத்தான் காட்டுகிறது.

பார்ப்பனீய, இந்துத்துவ சக்திகள்-கட்சிகள் பலவிதமான தந்திரங்களைக் கையாள்கிறார்கள். தலித் அமைப்பின் தலைவர்களை விலைக்கு வாங்குகிறார்கள். தலித் அமைப்பின் போராட்டங்களைக் கடுமையாக அடக்கி ஒடுக்குகிறார்கள். மறுபுறம் தங்கள் கட்சிகளுக்குள் SC பிரிவு துவங்குகிறார்கள். இன்று தங்களது அமைப்பே தலித்துகளுக்கானதுதான் என்று காட்ட தாழ்த்தப்பட்டவர்களை கட்சித் தலைவர்களாக்குகிறார்கள்.

எவ்வாறு தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் போன்ற உயர்சாதிக் கட்சிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட M.L.A., M.P., அமைச்சர்கள் ரிசர்வ் தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக இருந்தாலும் தங்கள் கட்சித்தலைவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோதிகளாகவும் இருக்கிறார்களோ அதுபோலவே தான் பாரதிய சனதாவின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் தாழ்த்தப்பட்டவர்களும் பார்ப்பனீயத்தின் அடிவருடிகளாகத் தான் செயல்பட முடியுமே தவிர தலித்துக்களாகச் செயல்பட முடியாது. தி.மு.க அரசால் தாமிரபரணி படுகொலை நிகழ்த்தப்பட்டபோது தி.மு.க-வில் உள்ள தாழ்த்தப்பட்ட M.L.A., M.P., அமைச்சர்களில் ஒருவர்கூட கண்டனக் குரல் எழுப்பவில்லை என்பதை இந்த இடத்தில் நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

எனவே B.J.P மேற்கொண்டுள்ள தாழ்த்தப்பட்டோர் தலைமை என்பதை பார்ப்பனீயத்தின் சதி என்று புரிந்து கொள்ள வேண்டும். தலித் தலைமை என்ற கருத்து மேலோங்கி வருவதைக் கண்டு, பிறப்பின் அடிப்படையில் மட்டும் தலித் தலைமை என்று சுருக்கி தலித் தலைமைக்கான உள்ளடக்கத்தைச் சிதைத்து அதாவது தலித் தலைமை என்பதிலுள்ள சாதீய எதிர்ப்பு - பார்ப்பனீய எதிர்ப்பு என்பதை உருவி எடுத்து விட்டு உள்ளீடற்ற தலித் தலைமையை நடைமுறைப் படுத்துவதன் மூலம் தலித் அமைப்புகளை நிர்மூலமாக்க முயற்சிக்கிறார்கள். ●

படிப்பகம்

www.padippakam.com



# சங்கம்

நசீம்

இன்றைக்கு (தொழிற்)சங்கம் என்பவை தங்களது புரட்சிகரத்தன்மையை இழந்து பேர அலகுகளாக மாறிப்போயுள்ளமை நாம் அறிந்த ஒன்றானாலும் இன்னும் பல துறைகளில், இடங்களில் தொழிலாளர் அமைப்பாவதைச் சகித்துக் கொள்ள முடியாத உடைமையாளர்கள் தொழிலாளர்களைப் பழிவாங்கும் போக்குகள் பரவலாக உள்ளதைக் காணவே முடிகிறது. ஒருபுறம் சங்கங்கள் கட்டப்பட்டு அவை சீரழிந்து போயுள்ள நிலை. மறுபுறம் சங்கமாவதற்காகக் கடுமையாகப் போராடுகின்ற நிலை என்ற இருவித நிலைமைகள் தமிழகச் சூழலில் காணப்படுகிறது.

காலனிய நாடுகளில் இந்தியத் துணைக்கண்ட மக்களின் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள விரும்பிய ஆங்கிலேய அரசு ஆலன் ஆக்டேவியன் கியூம் என்பவரைக் கொண்டு காங்கிரஸ் கட்சியை உருவாக்கியதைப் போல இன்றைய உடைமையாளர்களும் தங்களது கட்டுப்பாட்டில் நிற்கும்படியான தொழிற்சங்கத் தலைமையை அங்கீகரிக்கிறார்கள். மாறாக தங்களது கட்டுப்பாட்டிற்குள் நிற்காத போர்க்குணம் மிக்க அமைப்பாக்கத்தைக் கடுமையாக எதிர்த்து அடக்கி விடுகிறார்கள்.

உடைமையாளர்கள் இன்று தொழிற்சங்கத்தை அங்கீகரிப்பதற்கான காரணமே ஒரு சில தொழிலாளர் தலைவர்களைக் கொண்டு ஒட்டுமொத்த தொழிலாளர்களையும் சரிக்கட்டிவிட முடியும் என்ற நோக்கில் தான். தலித்துகள் அமைப்பாவதை முதலில் எதிர்த்தவர்கள் சாதிச்சங்கம் என்றவர்கள் பிறகு அங்கீகரித்து தேர்தல் கூட்டு வைத்துக் கொள்வதைப் பார்த்தோமே அது போலத்தான் தொழிற்சங்க நிலவரமும். இது வரை தொழிலாளர்கள் உதிரியாக இருந்த நிலை மாறி அமைப்பாவதை, தொழிற்சங்கம் கட்டப்படுவதை முடிந்தவரை உடைமையாளர்கள் எதிர்ப்பார்கள். பிறகு அவ்வாறு அமைப்பானவர்கள் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வருவதற்கு பலவழிகளிலும் முயற்சித்து அதில் வெற்றி கண்டுவிட்டால் பிறகு புதிதாக வேறு போர்க்குணமிக்க சங்கம் ஏதும் கட்டவிடாமல் பார்த்துக் கொள்வார்கள்.

இன்றைய நிலையில் சங்கம் என்பது தொழிலாளர்களுக்கானதாக மட்டுமல்ல. சிறுவியாபாரிகள் துவங்கி பெரும் முதலாளிகள் வரை உடைமையாளர்கள், உரிமையாளர்கள், அரசு சார்ந்த, அரசுசாராத பலதரப்பட்டவர்களும் தங்களது நலனுக்கான அமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இவற்றின் தலைவர்கள் பெரும்பாலும் தங்கள் உயர்சாதிய பலம், பொருளாதார பலம், ஆள் பலம், ஆளும் கட்சி பலம் என்ற பலவகையான பின்பலத்துடன் பண்ணையார்த் தனத்துடன் செயல்படுகின்றனர். இவர்கள் சங்க உறுப்பினர்களின் பொருளாதாரத்தை உறிஞ்சி சுகபோக வாழ்க்கை நடத்துகின்றனர். கூடவே முடிந்த மட்டும் ஆளுவோரை அண்டிப் பிழைக்கவும், லஞ்சம் கொடுத்து தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வழிமுறைகளையே கடைபிடிக்கும் பேர சக்திகளாகவே இருக்கின்றனர்.

மற்றொரு விசயம் விவசாயிகள் சங்கம், மீனவர் சங்கம் என்ற கட்டமைப்பு மிக மோசடியானவையாக இருக்கின்றன. விவசாயிகள் என்ற சொல்லாடலுக்குள் சிறு, குறு விவசாயிகள் முதல் பெரும் பணக்கார, பண்ணைகளான மூப்பனார், வாண்டையார் வரை வந்து விடுகின்றனர். அதுபோல மீனவர் என்ற சொல்லாடலுக்குள்ளும் கடலுக்குள் சென்று காற்றிலும் அலையிலும் மழையிலும் வெயிலிலும் அந்நிய இராணுவத்தாலும் அல்லலுறும் மீனவத் தொழிலாளி முதல் கரையில் வெயில் படாமல் இருந்து லாபம் பார்க்கும் வியாபாரி வரையில் அடங்கி விடுகின்றனர்.

ஆனால் விவசாயிகள் சங்கம் பணக்கார விவசாயியின் கையில் இருப்பதைப் போலவே மீனவர் சங்கமும் மீன்பிடி உடைமையாளர், வியாபாரியின் கையிலேயே இருக்கிறது. ஆகையால் பலன் முழுதும் அவர்களுக்கே கிடைக்கிறது. அரசு வழங்கும் விவசாயக்கடன், இலவச மின்சாரம், மானியங்கள் அனைத்தும் பெரும் பணக்கார விவசாயிகளால் அபகரிப்பதைப் போன்றே மீன்பிடித் தொழிலாளிகளுக்குச் சேர வேண்டிய உதவிகள், மானியங்கள், ரப்சீசன் பண உதவித் தொகை போன்றவை மீன்பிடி வலையைக் கையால் தொடாதவர்களும், கடல் நீரால் கருத்துப் போகாதவர்களுமான உள்ளூர், மீன்பிடியல்லாத ஆதிக்க சாதியினரால் அபகரிக்கப் படுகிறது. இவ்வளவு மோசடிகளையும் சங்கத் தலைமையைக் கையில் வைத்துக் கொண்டு செய்து வருகிறார்கள்.

ஆனால் உண்மையில் கடல் தொழிலாளிக்கு, கரையில் வேலை செய்யும் தொழிலாளிக்கு என்று தனியானதும் அவர்கள் தலைமையிலானதுமான சங்கம் இதுவரை கட்டப்படவில்லை. இருப்பவை எல்லாம் உடைமையாளர், உரிமையாளர் தலைமை யிலானதும் அவர்கள் நலனுக்கானதுமான மீனவர் என்ற பெயரிலான சங்கங்களே. இங்கு செய்யப்பட வேண்டியது விவசாயிகள், மீனவர்கள் என்ற வர்க்க வேறுபாடுகளை மறைக்கின்ற பொதுவான சொல் லாடல்களை மறுத்து மீனவத் தொழிலாளர் விவ சாயத் தொழிலாளர் என்று தனியாகப் பிரிந்து தங்களது நலனுக்காக, தாங்களே தலைமை தாங்கி குரல் எழுப்பும் சங்கம் கட்டப்பட வேண்டியதேயாகும். பின்பு இந்த சங்கத் தலைவர்களும் தங்கள் எதிராளியிடம் விலை போய் விடாதவாறு கட்டுப்படுத்தும் வளர்ச்சியை தொழிலாளர் பெற அவர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற வேண்டும்.

இதுவே இன்றைய நிலையாக இருக்கிறது. ஒருபுறம் தலித்துகளும், தொழிலாளர்களும் தங்களுக்கான (உண்மையான) தங்களது தலைமையின் கீழ் திரள்வது தடுக்கப்படுகிறது. மறுபுறம் மீறிப் போராடி திரண்டு அமைப்பாகி விடும் போது கடுமையான ஒடுக்குமுறையைச் செலுத்தி அழித்துவிட முயற்சிக்கிறார்கள். அல்லது தலைமையை விலை கொடுத்து வாங்கி சீரழித்து விடுகிறார்கள். இதற்கு நம்மிடம் உள்ள நாயக வழிபாடு உதவியாக இருக்கிறது. இத்தகைய மோசடித்தனங்களுக்கு எதிராக விழிப்புணர்வு பெறுவதே தலித்துகள், விவசாயிகள், தொழிலாளர்களது வரலாற்றுத் தேவையாகும். ●

படிப்பகம்

www.padippakam.com



திரைவிமர்சனம்

# வெற்றிக் கொடி கட்டு

ரா. ராஜா

திரைத்துறை ஒரு கனவுத் தொழிற்சாலை தான். ஆனால் சில நனவு அம்சங்களின் அடிப்படையில் தான் அது கனவுகளை உற்பத்தி செய்ய வேண்டும். ஆனால் தமிழக திரையிலகில் இதுவரை வந்த இயக்குநர்கள் அனைவருமே திரைத்துறையின் வாயிலாக மக்களை எதிர்நோக்கியுள்ள இன்றைய மிகப் பெரிய பிரச்சனைகளை எல்லாம் கையில் எடுத்துக் கொண்டு அவர்கள் கண்ட கனவிலிருந்து மக்கள் பிரச்சனைகளுக்கான தீர்வையும் சொல்லி முடித்து விட்டுச் சென்று விடுகிறார்கள். அந்த வரிசையில் வந்த சேரனும் காலங்காலமாக அவர்களின் முன்னோர்கள் சொல்லி வந்த அதே பாட்டி வடை சுட்ட கதையை மீண்டும் சுட்டு அதற்கு வெற்றிக் கொடிகட்டு என்னும் புதிய பெயரிட்டு அதை நம் கண் முன் அடுக்கி உள்ளார். சேரன் சுட்ட அந்த வடையின் மீது, இல்லை அந்தப் படத்தின் மீது நம் பார்வையைக் கொஞ்சம் பதிய விடுவோம்.

கதையின் ஆரம்பமே நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களைச் சேர்ந்தவர்கள் ஒரு உயர் தரப்பு வாழ்க்கை வாழ்வதற்காகப் பேராசைப் பட்டு, வீடு வாசல் நிலபுலங்களை எல்லாம் விற்று ஒரு வெளிநாட்டு ஏஜென்டிடம் பணத்தைக் கொடுத்து ஏமாறுவதாக அவர் தளத்தில் இருந்து கதையைத் தொடங்குகிறார். 'வெளிநாடு கூட்டிக் கொண்டு போகிறேன் என்று எவனாவது சொன்னால் அவனிடம் பணத்தைக் கட்டிவிட வேண்டியது. அதிக வட்டி தருகிறேன் என்று விளம்பரம் செய்தால் அவனிடமும் பணத்தைப் போட்டுவிட்டு அவர்கள் ஓடி விட்டால் அய்யோ பணம் போய்விட்டதே என்று கதற வேண்டியது. ஒரு லட்சம் பணம் கொடுத்து வெளிநாடு செல்கிறீர்களே அங்கே என்னய்யா வேலை பார்க்கிறீர்கள். ஒட்டகம் மேய்ப்பதும் கக்கூஸ் கழுவுவதும் கரி அள்ளும் வேலை தான் பார்க்குறீங்க. அந்தப் பணத்தை இங்கே போட்டுத் தொழில் தொடங்கினால் இங்கே நீயும் ஒரு முதலாளி! என்னய்யா இல்ல இந்தத் திருநாட்டில்?! எல்லாமே இருக்கிறது. இருந்தும் நீங்கள் இங்கே உழைக்க மறுத்து வெளிநாடு செல்வது என்ற பேராசை தான் காரணம்' என்ற அவர் கருத்தை ஆணித்தரமாக வைப்பதற்காக இந்நாட்டின் மக்களுக்காக உழைத்து உழைத்து ஓடாய்த் தேய்ந்த ஒரு காக்கிச் சட்டையின் வாயிலாக நீங்கள் உழைக்க மறுக்கிறீர்கள் என்கிறார் இந்த அறிவுஜீவி.

இந்த நாட்டிலே உழைத்தால் முன்னேறலாம் என்பது போல இரண்டு இளைஞர்களை எடுத்துக்காட்டாக வைத்து தமிழகத்திலேயே இதுவரை யாரும் சொல்லாத, செய்யாத தொழில்கள்?! இரண்டை அறிமுகப் படுத்துகிறார். அதில் ஒன்று பால்பண்ணை வைப்பது, அடுத்தது சிக்கன்65 போடுவது (ஒன்றை மறந்து விட்டார் ஊறுகாய் வியாபாரம்) என படம் ஆட்டம், பாட்டம், காதல், கிளிப்புட்டு என வழக்கம் போல் ஒரே பாட்டில் பணக்காரனாகி கடைசியாக தங்கள் பண பலத்தால் எல்லாவற்றையும் சமாளிப்பது போன்று தனது சிறுபிள்ளைத் தனமான சிந்தனைகளை விளையாட விட்டு படத்தை நிறைவு செய்கிறார். அந்தக் கையோடு சேரன் 30 நாட்களில் பணக்காரன் ஆவது எப்படி என்ற புத்தகத்தை எழுதி விட்டால் இளைஞர்கள் வெளிநாடு செல்லாமல் இங்கே இருந்து உழைத்து முன்னேற வாய்ப்பாக இருக்கும். ரத்தங்களை வேர்வையாய்ச் சிந்தி பல நாட்கள் பட்டினி வயிறோடு கிடந்து அரைக் காணி, ஒரு காணி என்று எங்கள் முன்னோர்கள் சேர்த்த நிலங்களை விற்று, வீட்டை விற்று பெண்டாட்டி தாலியை விற்று வெளிநாடு செல்லும் தன் மகனால் மூன்று வேளை கஞ்சி நிரந்தரமாகக் குடித்து விட மாட்டோமா என்று ஏங்கித் தவிக்கும் அடித்தட்டு மக்களையும், மூன்று தங்கைகள் இருக்கும் பட்சத்தில் குறைந்தது ஐந்து பவுன் நகையாவது போட்டு திருமணம் முடித்துக் கொடுத்துவிட மாட்டோமா என ஏங்கித் தவித்துச் செல்லும் இளைஞர்களையும், கல்வி மருத்துவம் என அடிப்படை வசதிகள் கூட மக்களுக்கு எட்டாத பொருளாக மாறி வரும் வேளையில் இந்த நடுத்தர வாழ்க்கையையாவது தக்கவைத்துவிட மாட்டோமா என முயற்சிக்கும் நடுத்தரவர்க்கத்தையும் வாய்ப்புள்ள இளைஞர்கள் இப்படி வெளிநாடு செல்லும்போது வாய்ப்பற்ற இளைஞர்களும் முதியோர்களும் தங்கள் வாழ்க்கையைத் தக்கவைப்பதற்காக சீட்டுக்கம்பெனிகள் என்று பணத்தைப் போடுகின்ற இந்த சிறு சிறு முயற்சியைக் கூட பேராசைதான் காரணம் என்று அங்கே தன் வர்க்கப் பார்வையைச் சரியாக வைக்கிறார் சேரன்.

வெளிநாட்டு ஏஜென்டு, சீட்டுக் கம்பெனி என இங்கே சிலர் மக்களின் பணத்தை எளிதாக அடித்துக் கொண்டு சென்றுவிடுகிறார்கள். மக்களைத் தூக்கி நிறுத்துகிறோம் என்ற பெயரில் இங்கே பாதுகாப்பதற்காக மட்டும் 150 க்கு மேல் கண்காணிப்பு நிறுவனங்கள் உள்ளது. அவர்கள் இங்கே என்ன வேலை செய்கிறார்கள். முட்டையில் மயிரு பிடுங்கும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்களா? என்பதே நாம் சேரனிடம் கேட்கும் கேள்விகள். அங்கே நாங்கள் கக்கூஸ் கழுவுகிறோமோ அல்லது கரி அள்ளுகிறோமோ அங்கே போய் விட்டால் நாங்கள் கொடுக்கும் பணத்துக்கு உத்திரவாதம் இருக்கிறது. நாங்க இங்கே போட்டுத் தொழில் தொடங்கும் அந்தப் பணத்திற்கு இந்த அரசால் உத்திரவாதம் கொடுக்க முடியுமா? வெளிநாடு செல்லாதே இங்கேயே இரு - உழை - நாட்டை முன்னேற்று என்று வாழ்க்கை தேடி ஓடி செல்பவர்களைப் பார்த்து கூவும் சேரன் அப்படியே இன்னொரு பக்கம் திரும்பி மத்திய மாநில அரசே உள்நாட்டுத் தொழில்களைப் பாதிக்கும் வெளிநாட்டுக் கம்பெனிகளை உள்ளே அனுமதிக்காதே - இங்கே புதிய தொழில்களைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடு - உள் நாட்டில் தொழில் தொடங்கும் இளைஞர்களுக்குச் சலுகை கொடு எனக் கூற இந்த சேரனுக்குத் துணிவு இருக்கிறதா?' தவறுகள் அனைத்தும் அரசின் மீது இருக்கும்போது 0.1 சதவீதம் தவறுகளை அரசு மீது வைத்துவிட்டு 99.9 சதவீத தவறுகளை மக்கள் மீது வைக்கிறார் சேரன்.

அபுபக்கர் ஏஜென்சிஸ் என்ற முஸ்லீம் நிறுவனத்தைக் காட்டி அப்பாவி இந்துக்களைக் குறி வைத்து ஏமாற்றுகிறார்கள் என்ற அவர் (சேரன்) கருத்தை மறைமுகமாக சார்லி பாத்திரத்தின் மீதேற்றிக் காண்பிக்கிறார். வெளிநாட்டில் கக்கூஸ் கழுவும் வேலைபார்த்துத் திரும்பிய வடிவேலுவை படம் முழுவதும் அதைச் சொல்லியே பார்த்திபன் ஓட ஓட விரட்டுவார். கக்கூஸ் கழுவுவது இந்த நாட்டிலேயே மிகக் கேவலமான தொழிலாகவும் அதைச் செய்பவர்களை மனிதனாகக் கூட மதிக்க அவசியம் இல்லை என்கிற சேரனது உயர்சாதி மனோபாவம் தெளிவாகத் தெரிகிறது.

வடிவேலு சோதிடம் பார்க்கும்போது கலைஞர் என்றால் சட்டசபையில், ஹர்ஷத் மேத்தா என்றால் சிறைச்சாலையில், என்பது போல் ஒரு வாசகம் வரும். ஹர்ஷத் மேத்தாக்கள் பார்லிமென்டில்

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறார்கள் என்ற செய்தியை சேரனிடம் யாராவது சொல்லி விடுங்கள். உழைத்தால் மானத்தோடு வாழலாம் என்று சொல்லும் இந்தத் தன்மானச் சிங்கம் 'கருப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு' என்ற பாடலில் ரஜினி காலை நைசாக நக்கியுள்ளார். வெளிநாடு சென்றால் அள்ளிக் கட்டுவது என்பது முடியாது என்ற சேரன் வெளிநாடு சென்று திரும்பிய வடிவேலு பணக்காரனாக வந்ததுபோல் காட்டி அவர் கதையின் அடித்தளத்தை அவரே அசைத்து ஆப்பசைத்த குரங்குபோல திருதிரு வென்று முழிக்கிறார்.

ஆனால் ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. தன் வர்க்கத்தையும் தனக்கு விருது கொடுக்கும் இந்த அரசாங்கத்தையும் பாதுகாப்பதற்காக படத்தில் படாதபாடு பட்டுள்ளார் சேரன். அவர் கண்காணிப்பையும் மீறி இந்த அரசால் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது என்ற நிலை தானாக வரும்போதெல்லாம் த... மானம் பாராமல் தான் கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்துக் கொண்டு அங்கும் இங்குமாக ஓடி ஓடி திரையில் மறைக்கிறார் என்பது நமக்குத் தெரிகிறது. ஆனால் உணர்ச்சிவசப்பட்டு அவர் அவிழ்த்ததில் தான் கோவணம் கட்டாததுகூடத் தெரியாமல் அம்மணமாக நிற்பது அவருக்குக் கடைசி வரைத் தெரியவில்லை. எது எப்படியோ த.மு.எ.ச-வினர் சிலாகித்துப் பேச ஒரு படம் கிடைத்து விட்டதால் அவர்களும் சேரனுடன் சேர்ந்து பழநி முருகனுக்கு அரோகரா போடலாம். ●

## நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

அண்மையில் ஆகஸ்ட் 12, 13 தினங்களில் கன்னியாகுமரியில் நடந்த நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் எனும் வரைவில் 2 தினங்கள் கருத்தரங்கில் அழைப்பின் பேரில் கலந்து கொண்டோம்.

பல்வேறு தலைப்புகளில் அமர்வுகளும், விவாதங்களும் நிகழ்ந்தன.

திராவிட இயக்கமும்,இலக்கியங்களும்_முனைவர் தொ. பரமசிவன்

மணிக்கொடிமூலவர்கள் (புதுமைப்பித்தன் பற்றிய ஆய்வு) _சாருநிவேதிதா

வெகுசன விருப்பும், கருத்துருவாக்கமும் _ அ. ராமசாமி.

புலம் பெயர் வாழ்க்கையும் தமிழன் அழற்சியும் _ ஷோபாசக்தி

புலம் பெயர் இலக்கியம் _ தெ. மதுசூதனன்

ஒரு நூற்றாண்டு தமிழ் வளர்ச்சி _ அ. மார்க்ஸ்.

ஆகியோரின் மற்றும் வேறுசிலரின் ஆய்வுகள் பயனுள்ள வகையில் பங்கேற்பாளர்களுக்கு முன் வைக்கப் பட்டன. விவாதத்திற்குரிய நேரத்தை ஒழுங்கு செய்வதில் ஏற்பட்ட தவறின் காரணமாகவும் 'பல்வேறு அமர்வுகள் நேரத்தை விழுங்கிவிட்டதின் காரணமாகவும் விரிவான விவாதத்திற்கான களன் அமையவில்லை.

நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த வானவில் இலக்கிய வட்டம் அடுத்த முறை இன்னும் சிறப்பாகச் செய்வார்கள் என்று எதிர்பார்ப்போம்.

வானவில் இலக்கிய வட்டத்திற்கும் நண்பர்கள் குமாரசெல்வா, கே. புஷ்பராஜ், எட்வர்ட் ஆகியோருக்கு எம் நன்றியும் வாழ்த்துக்களும்.

_சமூக விஞ்ஞானப் பயிலகம்.



◎ காந்தி நடத்திய வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றித்தான் நமக்குத் தெரியும். ஈ.வெ.ரா. பெரியாரின் மாடு தின்னாதவனே வெளியேறு பற்றித் தெரியுமா?

விடுதலை ஏட்டில் அவர் எழுதியிருப்பது "நான் எனது 25. வயதிலிருந்தே மாட்டு மாமிசம் சாப்பிட்டு இருக்கிறேன். மக்களும் சாப்பிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். பன்றி, கோழி, மீன், பறவை போல மலம், பூச்சி, புழு முதலிய அசிங்கத்தை மாடு சாப்பிடுவதில்லை. மாடு வதை கூடாது என்று வலியுறுத்துகிறவர்கள் யாராயிருந்தாலும் மரியாதையாக வேறு நாட்டிற்குப் போய் விடுவதே மானமுள்ள காரியமாகும்."

- விடுதலை 17.10.1966

◎ இட ஒதுக்கீடு தேவைதான். அது தொடர்ந்து இருக்க வேண்டும். துப்புறவுத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் நூறு சதவீதம் தலித்துகளுக்கே ஒதுக்கப் பட்டுள்ளது. எந்த பிராமணனை அங்கே பார்க்க முடியும் . யாரா்வது பிராமணர்கள் அதில் இருக்கிறார்களா? ஏன் அவர்கள் அங்கே போய் இட ஒதுக்கீடு கேட்கக் கூடாது ? நானும் தெருக் கூட்டுகிறேன், கக்கூஸ் சுத்தப் படுத்துகிறேன். நான் ஏன் அதைச் செய்யக் கூடாது என்று சொல்லட்டுமே? என டாக்டர் அம்பேத்கார் சொல்லியிருக்கிறார். இரண்டு குதிரைகளில் ஒன்று ஆரோக்கியமானது, பசியோடிருக்கிறது. இன்னொன்று பலவீனமானது, பசியோடிருக்கிறது. எந்தக் குதிரை நிறையச் சாப்பிடும் _ ஆரோக்கியமானதா ? பலவீனமானதா ? ஆகவே இரண்டையும் முதலில் ஒரே மாதிரி ஆரோக்கியமாக்குங்கள். அதன் பிறகு இரண்டையும் பந்தயத்தில் விடுங்கள்.

- ஊர்மிளா பவார்.

மராத்திய தலித் பெண் எழுத்தாளர்

காலச் சுவடு _ 29 வது இதழிலிருந்து

www.padippakam.com



## சனாதனிகளை நோக்கி. . .

வருணன்

பிள்ளையார் சுழியிலே தொடங்குகிறாய்
காசில்லையென்றால் லெட்சுமி காலையும்
அறிவில்லையென்றால் சரஸ்வதி காலையும்
கூசாமல் நக்குகின்றாய்
அஹிம்சை குறித்தும் பேசும் நீ
உனது கார்கில் வினாயகன் கையில்
பீரங்கி கொடுத்திருக்கிறாய்
உனது வாகனங்கள், வீடுகள்
தாமரைப்பூ அணிந்திருக்கின்றன
நீ இன்னும் சேற்றுக்குள்ளிருப்பதை
உறுதி செய்தபடிக்கு
அணுகுண்டு வெடிக்கிறோம் என்கிறாய்
கொஞ்சம் பொறுத்துக்குங்க
விரைவில் வருகிறார் வல்லரசு என்கிறாய்
ஏன் உன் தெய்வங்களின் அஸ்திரங்களையும்
சேர்த்துக் கொள்வதுதானே?
சாட்டிலைட்டிற்குப் பதிலாக
உள்ளதை உள்ளபடி காட்டும்
மாயக்கண்ணாடி
அக்னிக்குப் பதிலாக வஜ்ராயுதங்கள்
இப்படி
உடல் முழுக்க திருநீறு பூசிக்கொண்டு
சன்னதிகளில் உருளுகிறாய்
காசுச் செருக்கோடு
உன் இளைய தலைமுறை
ஆடையவிழும் MTV க்களில்
நிர்வாணமாகுகிறது.
இந்த தேசத்தின்
ஆறுகளனைத்தும் வறண்டபின்பு
விளைநிலங்கள் ஏதுமற்றுப் போனபின்பு
சந்தோசமான மனிதன் எவனும்
இல்லாமல் போன பின்பும்
நான் இருப்பேன்
என் தேசம் என்னவாயிற்றென்று
உன் தெய்வம்
வேடிக்கை பார்க்க இங்கு வந்தால்
செருப்பாலடிப்பதற்கு.

## எல்லோரும் இங்கே கவனியுங்கள். . .

ரா.ராஜா

மணியடித்து அரைமணி
நேரத்திற்குப் பிறகு
வாரிச்சுருட்டிக் கொண்டு
வகுப்பறைக்குள் வந்த
எங்கள் தமிழ் வாத்தியார்
பேசுபவன் பெயரை எல்லாம்
எழுதி வை என்றவாறு
பக்கத்து வகுப்பு டீச்சருடன்
பேசச் சென்றார்.

அடுத்து ஆங்கில வாத்தியார்
ஆங்கிலம் என்பது
கிணற்றுக்குள் இறங்குவது
போன்றது. அதில்
டியூசன் என்ற கயிற்றைக்
கட்டிக் கொண்டு இறங்கினால்
எளிதில் இறங்கி
ஆழம் பார்த்து விடலாம்
என்ற அவர் தத்துவத்தை
இருபதாவது முறை கூறி
வகுப்பை நிறைவு செய்தார்.

அறிவியல் வாத்தியார்
நீங்கள் எல்லாம்
பள்ளிக்கு வெளியே
பாட்டிகள் விற்கும்
ஈ மொய்க்கும்
பண்டங்களை வாங்கித்
திண்ணக்கூடாது
அப்பொழுது நான்
சார் நீங்கள் விற்கும்
ஊறுகாய்ப் பொட்டலம். . .?
டேய் அதிகப் பிரசங்கி
பாட்டியிடம் தானே
வாங்கித் திண்ணக் கூடாது
என்றேன் என்றார்
கணக்கு வாத்தியார்
தனது அரிசிக் கடைக்
கணக்குகளை
கரும்பலகையில் எழுதிவிட்டு
இது எப்படி
இங்கே வந்தது ?! என்று
வழக்கம் போல்
புலம்பிவிட்டுச் சென்றார்.

வரலாறு டீச்சர்
எங்களிடையே புதிய
வசதியான பையன்களை
மட்டுமழைத்து
என்னிடத்தில்
தவணை முறையில்
சேலைகள் கிடைக்கும்
விசயத்தை உங்கள்
அம்மாக்களிடம்
சொல்லி விட்டீர்களா ?
எனக் கேள்வி கேட்டார்.
வாங்கிய தவணையைச்
சரியாகக் கட்டாத
மூன்று மாணவர்களின்
மதிப்பெண்களைக்
குறைத்துவிட்டதாகக் கேள்வி.

இதுபோல அனுபவம்
இதுவரை எனக்கு
வந்தது இல்லை
ஆனால் எங்கள் தலைமையாசிரியர்
வருவதை மட்டும் பார்த்துவிட்டால்
ஆசிரியரனைவரும்
நடுநடுங்கிப் போய் விடுவார்கள்
எந்த நேரமாக இருந்தாலும் சரி
எந்த இடமாக இருந்தாலும் சரி
கொடுத்த பணத்திற்கு
வட்டி கேட்டு
விளாசித் தள்ளி விடுவார்
போங்கள் !

## விந்தை

"தனியொருவனுக்கு உணவில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்"
இருப்பவனிடம் எடுத்து
பகிர்ந்தளிக்க ஏன் மறந்தான் பாரதி?!

-ராமு.

## அரசியல் வாதிகள்

வாக்கைத் தெளித்து
ஓட்டை வாங்கி
சீட்டைப் பிடித்து
வரிப்பணத்தைச் சுருட்டி
வாயில் போட்டுசுயிங்கமாய்
மக்களைச் சுவைத்துத் துப்பும்
மனித மிருகங்கள்!

-ராமு.

எங்கள் கம்யூனிஸ்டுகள்
அன்று நேருவிடம் தொலைத்ததை
இன்று சோனியாவிடம்
தேடிக் கொண்டிருக்கிறார்கள்
சோசலிசம் ?!

-காளி

படிப்பகம்

www.padippakam.com



# மக்கள் சினிமா - மாதிரித் திரையரங்கு - ஒரு பார்வை

மனோஹரி

காட்சி ஊடகங்கள் பற்றிய விழிப்புணர்விற்கும், மாற்று சினிமாவின் தேவை, ஆவணப்படங்களின் சமூகப் பங்களிப்பு போன்ற பல்வித முனைப்புகளோடு மக்கள் சினிமா-மாதிரி திரையரங்கு இராமேஸ்வரத்தில் நிகழ்த்தப்பட்டது. இதன் நோக்கம் கலை சினிமா - வர்த்தக சினிமா கோட்டு விரிவை அழிப்பதும், மக்கள் கவையான சினிமா என்கிற மாபெரும் ஊடகம் பிற்போக்கு மடையர்களிடம் சிக்கியிருப்பதுவும் - என்பதனையும் விவாதமாக கொண்டிருந்தது.

சமூகத்துடன் பிணைந்திருப்பதும், நேரடியான விளைவுகளை உருவமைக்கும் சக்தியுடையதுமான திரைப்படங்கள் நமது வாழ் சூழலில் ஏற்படுத்தியுள்ள மோசமான பின்னடைவுகளும், எதிர்மறை தோற்ற எண்ணங்களும், அதிகாரம், அரசியல், மேன்மக்கள், கீழ்மக்கள் என வகை பிரிக்கப்பட்டு சிதறிப்போன மக்களின் மேல் படிந்துள்ள தாக்கத்தின் வீரியத்தில் இருந்து, மாறுதலுக்கான சினிமாக்களாக நாம் தேடித்தேடி பொறுக்கி எடுக்கவேண்டிய நிலையிலுள்ள சினிமாக்கள், அவற்றை காண்பதற்கான மனோநிலை கொண்ட மனிதர்கள் முன்னிலையில் அதனதன் இயல்பான ஆவேசத்தோடும், எண்ணப்பிறப்போடும், கருத்தின் தீவிரத்தன்மையோடும் வெளிப்படுகையில் இந்த பன்முனை தொடர்பு சாதனமான திரைப்படம் எந்த அளவிற்கு முக்கியமானதாக ஆகிறது எனப் புரிந்துகொள்ள முடிந்தது.


இராமேஸ்வரத்தில் மாதிரி திரையரங்கு நடத்தப்பட்ட விதம், அதன் விளைவுகள், அதனை தீவிலுள்ள ஆர்வலர்கள் எதிர்கொண்ட விதம் ஆகியவை எழுச்சிக்கான பாதையில் ஒரு சிறிய நம்பிக்கை ஒளியாக வீசியது. இதில்

அமுதனின் - தீவிரவாதிகள்

ஆனந்த் பட்வர்த்தனின் - Bombay Our City
Memories of My Friends

இத்தாலிய இயக்குனர்
பெர்னார்டோ பெட்ரோலுச்சியின் - BESIEGED

ஆகிய படங்கள் திரையிடப்பட்டு விவாதிக்கப்பட்டன. அமுதனின் *தீவிரவாதிகள்* திரைப்படம் பார்வையாளர்கள் மீது கடுமையான விளைவை எதிர்கொண்டது. கடல் நகரமான இராமேஸ்வரத்தில் இந்த அரங்கு ஓரளவு சரியான விளைவுகளை ஏற்படுத்தியிருந்ததை அடுத்த இரண்டு நாட்களில் உணர்ந்து கொள்ள முடிந்தது. எளிய மிதிவண்டித் தொழிலாளி ஒருவர் தோழர் ஒருவரிடம் இதுபற்றி கேட்டது. இம்மாதிரியான அரங்கின் தேவையை உறுதிப்படுத்தியது. எளிய மனிதனைச் சென்று சேராத எந்த கலை இலக்கிய இயக்கமும் பெரும் வரலாற்று மாற்றங்களைக் கண்டதில்லை. திரைப்படம் என்பது காட்சிகளின் அடுக்குகளின் வழியே பீறிட்டெழும் ஒரு விமர்சன உணர்வு. அது மக்களின் கலாச்சார வழிமுறைகளில் இருந்து அதிகாரத்துவத்திற்கு எதிரான காத்திரமான ஒரு கலகக் குரல். மக்களை புரட்சியோடு இணைக்கும் ஒருமையுணர்வின் அழைப்பின் முழக்கம். மேற்கொண்ட கருத்துக்கள் யாவும் அமுதனின் *தீவிரவாதிகள்* ஆவணப்படம் கண்டதும் யாவருள்ளும்



எழும் ஒரு ஆவேச உணர்வு. இப்படம் மக்களின் எளிய குரல்களின் வழியே ஆதிக்க வர்க்கத்தின் வன்முறையையும், சீரழிந்த வாழ்வின் ஓலங்களையும் ஒவ்வொரு இதயத்தையும் அதன் வலியோடு திறந்து காண்பிக்கின்றது. திரையிட்டதும் பார்வையாளர்கள் யாவரும் ஸ்தம்பித்துப் போயினர். போலீஸின் அடக்குமுறைக்கு எதிராகவும் இன்று பெருகிப்போன முறையற்ற தாதா அரசியல் ஃபாசிச கலாச்சாரத்திற்கு எதிராக, முகத்தின் நேராக மக்களால், குறிப்பாக பெண்களால் வீசப்படும் திராவக உணர்வுகளை எழுப்பியதில் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தியது.

நிகழ்விற்கு முந்தைய தினம் புதுவை இளவேனில், நிகழ்வின் முக்கியத்துவம் க்ருதி தனது குறும்படம் *விடியலை நோக்கி* என்பதனை அனுப்பியிருந்தார். பா. கிருஷ்ணகுமாரின் சிறுகதையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட சுமார் 10 நிமிட கால அளவுள்ள இப்படம் குறும்படமாயிருந்தும், வசனமற்றதாயிருந்தும் பார்வையாளர்களை கவனிக்கச் செய்தது. காட்சிப்படுத்துதலில் குறைபாடுகள் இருப்பினும், நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சியும், ஆர்வமும் பாராட்டுதலுக்குரியது.

தீபா மேத்தாவின் *ஃபயர்* திரையிடத் திட்டமிட்டு பின்பு நிகழ்வுக்குழு விவாதித்த பின் நீக்கப்பட்டது. இப்படம் திரையிடப்படுகிறது என்றதுமே, ஆபாச நோக்கோடு சிலர் இதனைக் காண முயல்வதையும், ஒட்டுமொத்த அரங்கையே இதுகொண்டு விமர்சிக்க முயற்சித்ததையும் கருத்தில் கொண்டு, இத்திரைப்படம் விவாதிக்கப்பட வேண்டிய அவசியம் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளும் வரை திரையிடுவதில்லை என முடிவு செய்யப்பட்டது. ஆனந்த் பட்வர்த்தனின் திரைப்படங்கள் மொழிப் பிரச்சனையால் பார்வையாளர்கள் மத்தியில் சிறிது தொய்வை ஏற்படுத்தியது. அவரது படங்களின் தீவிரத்தன்மையும், அதிகார வர்க்க அடக்குமுறைகளின் பாதிப்புகளை படமாக்கியிருந்த் விதமும் நம்ப முடியாததாக, மிரளச்செய்வதாக இருந்தன. சீக்கியர்கள் பகத் சிங் மீது வைத்துள்ள அளவு கடந்த பாசமும், அதன்னை அவர்கள் நியாயப்படுத்தும் வன்மையும் ஆச்சரியப்படுத்தியது. வேற்றுமொழி ஆவணப்படங்கள்

படிப்பகம்

www.padippakam.com



இராமேஸ்வரம் பார்வையாளர்களுக்கு அதிகபட்சமாயிருப்பினும், அவர்கள் இறுதிவரை தீவிரமாக கவனித்தது மதுரை, சென்னை போன்ற பெருநகர திரை அரங்குகளில்கூட காணமுடியாத விஷயமாக இருந்தது.

நமது சூழலில் தமிழில் காத்திரமான படைப்புகளும், பதிவுகளும் தேவை என்பதை அவை உணர்த்தின. தொடர்ந்து சிறுபட இயக்குநர்களும், இயக்கங்களும் இணைந்தால் இந்த அரங்கை மேலெடுத்துச் செல்லமுடியும் எனத் தெரிகிறது. பெட்ரோலுச்சியின் படம் ஒரு ஐரோப்பிய இளைஞனுக்கும், ஆப்பிரிக்கப் பெண்ணுக்குமான உறவை அதன் கலாச்சார, பண்பாட்டு தளங்களுடன் விமர்சன பூர்வமாக எடுக்கப்பட்ட கதைப்படம். இப்படம் மொழியைக் கடந்து பார்வையாளர்களை ஆர்வம் கொள்ளச் செய்தது. வழக்கமான பெட்ரோலுச்சியின் திரைப்படங்களிலிருந்து இது சற்று மாறியிருந்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் முடிவில் சினிமாவின் சமூகத் தாக்கங்கள், கலைஞனின் பொறுப்புணர்வு, மாற்று சினிமாவிற்கான தேவை, *தீவிரவாதிகள்* போன்ற படங்களை இயக்கத்தின் வழியாக மக்களுக்கு கொண்டு செல்லவேண்டிய அரசியல் புரிதல், சமகால மத ஃபாசிசம், கதாநாயக பிம்ப வழிபாடு, பெண் பாலியல் வன் கொடூரங்கள் உள்ளிட்ட பல்வேறு முனைகளை தொட்டு பார்வையாளர்கள் விவாதம் கொண்டதும், ஒரு ஜனநாயகபூர்வமான அரங்கினை எழுப்புவதற்கான விஷயங்களாகப் பட்டது.

பார்வையாளர்களிடையே தோன்றிய பலவித கேள்விகளுக்கும், ஐயங்களுக்கும் இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்ட ஹவி விளக்கம் கொடுத்து வந்தார். அவரது பேச்சு பலரது கேள்விக்குக் குறுக்கீடாக அமைந்தாலும், பேச்சின் தேவை கருதி அவை வீர்யப்பட்டது. எந்தவித அரசியல் சார்பற்ற, தனிமனித மனத்தின் செயல்பாடுகளை அலசிப் பார்க்கும் முகமாக நடத்தப்பட்ட இந்த அரங்கு குறித்தும், சில நண்பர்கள் பொருளாதார ரீதியான விஷயங்களுக்கு விமர்சனம் வைத்தது மனதை வருத்தியது. நமது உணர்வுகளின் நிலைப்பாடு குறித்த ஐயம் பெரிதாகத் தோன்றியது.

இந்த நிகழ்வை சமூக விஞ்ஞானப்பயிலகத்தின் புதியதடம்-இதழ், கலை இலக்கிய பெருமன்றம், புனர்-கவிதை இதழ் மற்றும் இடறல்-காலாண்டிதழ் சார்பாக மனேஷ், மேகவண்ணன், அக்னிபாரதி மற்றும் நண்பர்கள் வடிவம் செய்தனர். ஹவியால் ஒருங்கிணைக்கப்பட்டது. ●

<u>திரைவிமர்சனம்</u>

# மாயி

மாயி ஒரு நேர்மையான நிலப்பிரபு!

<u>பின் குறிப்பு:</u>

<u>டி.வி. விளம்பரமொன்றில் தன் தாயிடம் குழந்தை கேட்கிறது.</u>
அம்மா, நேர்மைன்னா என்னம்மா ?!

விரிவான தெளிவான விமர்சனத்தை எதிர்பார்த்தவர்களுக்காக

<u>மற்றொரு பின் குறிப்பு:</u>

திரைப்படத்தை தியேட்டரில் அல்லது விசிடியில் அல்லது வீடியோ கேசட்டில் பாருங்கள்!
அல்லது

புதியதடம் முகவரிக்குக் கடிதம் எழுதுங்கள்!!

**– மேகவண்ணன் –**
(படம் பார்த்த சூட்டோடு)

படிப்பகம்

www.padippakam.com



# விசுவின் அரட்டை அசிங்கம்

## V. கோபால கிருஷ்ணன்

தொலைக்காட்சிநிகழ்ச்சிகளில் திரைப்படங்களுக்குப் பின் பெரும் வரவேற்புப் பெற்ற நிகழ்ச்சி பட்டிமன்றங்கள். அதுவும் தலைப்புகள் யாரையும் சிந்திக்கத் தூண்டி சிரமப்படுத்துவதாக இருத்தல் கூடாது. யார் யோக்கியர்கள்? ஆண்களே, பெண்களே அல்லது மாமியாரா, மருமகளா என்பது மாதிரியாக, இடையிடையே இரட்டை அர்த்தம் ததும்பும் நகைச்சுவைகள் அவசியம்.

ஆனால், விசு இதிலிருந்து கொஞ்சம் வித்தியாசப்பட்டவர். ஒரு காலத்தில் எதுகை,மோனைத் தலைப்புகளில் அதாவது 'விசு ஒரு கொசு' என்பது போல நாடகங்களை சினிமாவாக எடுத்து மிடில் கிளாஸ் பிராமின்சுக்குப் புத்தி சொல்லிக் கொண்டிருந்தவர் ஒரு படி மேலே உயர்ந்து சன் டிவியில் ஞாயிற்றுக்கிழமைகளில் அரட்டை அரங்கம் நடத்தக் காரணமாயிருக்கிறார். வெவ்வேறு ஊர்களில் வித்தியாசமான தலைப்புகளில் நிகழ்ச்சி நடத்தப்படும். உள்ளூரில் நல்லா பேசத் தெரிந்தவர்களுக்குத் தேர்வு நடத்தி இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். தேர்வு விதிகள் என்னவென்று தெரியவில்லை.

நிகழ்ச்சியில் அனைவரும் பேசி முடித்ததும் இறுதியில் விசு உணர்ச்சிகரமான தீர்ப்புரை ஒன்றை வழங்குவார். அவர் பேச்சில் தொனிக்கிற சத்தியாவேசத்தையும், நாட்டுப் பற்றையும் கவனிக்கும் யாரும் உணர்ச்சி வசப்பட்டுப் போவார்கள் என்பது உறுதி.

இவருடைய ஆவேசத்தின் காரணிகள் பல. அவற்றில் ஒன்று நாட்டுப்பற்று. (எச்சரிக்கை: பேச்சுவாக்கில் நாட்டுப்பற்று என்பது ஏதோ இனிப்பு, காரம், கசப்பு மாதிரி இயற்கையிலேயே இருக்கக்கூடிய ஒரு சமாசாரம் என சித்தரிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு: நடிகர் அர்ஜுன் பிறந்த தேதி ஆகஸ்ட்டு பதினைந்தாம். எனவே, அவருக்கு நாட்டுப்பற்று எப்போதும் கொதிநிலையிலேயே இருக்கும் எனக் கேள்வி.)

சரி, கண்களில் நீர் மல்க நாட்டுப்பற்று குறித்துப் பேசும் விசு போன்றவர்கள் ஏன் இராணுவத்திற்குப் போகாமல் உள்ளூரில் சாம்பார் படம் எடுத்து பிஸினெஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் கேள்வி கேட்பது அநாகரிகமானது. ஏனெனில், தேசப்பற்று என்ற வார்த்தையை உலகினுக்கீந்து வான் புகழ் பெற்ற வாஜ்பேயோ, அத்வானியோ அல்லது ஜோஷியோ கூடத் தங்கள் பிள்ளைகளையோ, பேரன்மார்களையோ இராணுவத்திற்கு அனுப்பியதில்லை என்கிற போது இவர்களிடம் அக்கேள்வியைக் கேட்பது சரியில்லைதான்.

நாட்டுப்பற்று என்பதும் கூட பாகிஸ்தானுக்கு எதிரான நாட்டுப்பற்று என்பதே மிகவும் பாராட்டத் தக்கது. இந்தியாவின் சில பகுதிகளை வென்று தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறப்படும் *சீனாவிற்கு* எதிரான நாட்டுப்பற்று அவ்வளவாகப் பாராட்டப் படுவதில்லை. (எ.கா: ஜார்ஜ் பெர்னாண்டஸ் விவகாரம்) ஒரு வேளை சீனர்களை வில்லன்களாகச் சித்தரித்து படம் எடுப்பது கதை எழுதுவது என்பது அவ்வளவாக மக்களால் விரும்பப்படுவது இல்லையோ என்னவோ. உள்ளூர் முஸ்லீம்களைத் திட்டுவதற்கு சீனா உபயோகப்படாது என்பதாகவும் இருக்கலாம்.

முன்பெல்லாம் சாதிக் கொடுமையை சகிக்க மாட்டாத தலித் இளைஞர்கள் பட்டாளத்திற்குப் போய் விடுவதுண்டு. இவர்களிடம் கூலி வேலை செய்து கஷ்டப்படுவதைக் காட்டிலும் இது மேல் என்பதே காரணம். இப்போது வேலை வாய்ப்பின்மை போன்ற காரணங்களால் சராசரிக்கும் கீழான மற்ற வர்க்கத்தினரும் சேர்ந்து கொள்ள கூட்டம் அதிகரித்துள்ளது. (இராணுவத்தை லட்சியமாக வைத்து வருபவர்களும் உண்டு)

ஆட்சேர்ப்பு அலுவலகங்களில் கூடும் இவ்விளைஞர்களை வெறும் டவுசருடன் புகைப்படம் எடுத்துப் பிரசரித்து இதோ பாருங்க நாட்டுப்பற்று எனக் கூக்குரலிடுகிறது தகவல் தொடர்புச் சாதனங்கள். இதுதான் பத்திரிக்கை தர்மம்.

இதனினும் கொடுமையான செயல் என்னவென்றால் சீக்கியர்கள் மற்றும் கூர்க்கா இனத்தவரை கலாச்சார ரீதியாகவே போருக்குப் பழக்கி பயன்படுத்திக் கொண்டதுடன் அவர்களை முட்டாள்களாகச் சித்தரித்து சிரிப்புத் துணுக்குகள் பரப்பப்பட்டு வருகிறது.

ஒப்பீட்டளவில் காவல்துறை ஆட்சேர்ப்பு அலுவலகத்தில் கூடும் கூட்டம் அதிகம். ஏனெனில் வரும்படி அதிகம். ஆனால் மரியாதை குறைவு. (போலீசுகாரனுக்கு நல்ல சாவு வராது எனப் பொதுமக்கள் மத்தியில் உலவும் கருத்து உதாரணம்.)

சொத்துள்ளவர்கள், அரசு வேலை மற்றும் தனியார் வேலை(சினிமா வேலை?) பெற்றுச் சுகமாக செட்டில் ஆகிவிட்டவர்களை எல்லையில் நின்றும் உள்ளூர் ஆபத்துக்களினின்றும் காப்பற்றும் பெரும் பொறுப்பு இவர்களுக்கு இருக்கிறது.

இவனுங்க இல்லாட்டா நம்ப நெலம என்னாவுறது என்கிற விதமாய் நடுத்தர வர்க்கம் இவர்களுக்கு அழுது அஞ்சலி செலுத்துவதை அரட்டை அரங்கம் போன்ற நிகழ்ச்சிகளில் காண்கிறோம். யாருமே வசிக்க முடியாத கார்கிலில் நடந்த சண்டைக்கு கோடி கோடியாய் உதவி. ஒரிசாவில் புயல் பாதிப்பினால் இலட்சக்கணக்கான மக்கள் உயிர், உடமை இழந்து தவித்தபோது போனால் போகுது இந்தா பிச்சைக்காசு என்கிற விதமாய் என்ன தேசபக்தி எழவோ?

கேள்வி முறையின்றி வளர்ந்து வரும் மதவாதம் விசுவின் மேடைகளில் கும்மாளமிடுவதைக் காண முடிகிறது. இவரை ஒரு தனிநபர் மதவெறி இயக்கம் என்று கூடச் சொல்லலாம். மதவெறிக்குப் புகழ் பெற்ற திருப்பூரில் (முன்பு பனியன்) நடந்த நிகழ்ச்சியில் ஒருவர் போப்பாண்டவரை கார் டிரைவராக வைத்து ஜோக் சொல்ல தன் கறை படிந்த பற்களைக் காட்டி இளித்த விசு, போப்பாண்டவருக்குப் பதிலாக அதே இடத்தில் சங்கராச்சாரியாரை வைத்து அதே ஜோக்கைச் சொல்லியிருந்தால் எப்பொழுதும் தன் கையில் ஆட்டிக் கொண்டிருக்கும் துண்டால் வாயைப் பொத்தியபடி ஒருபாட்டம் அழுது தீர்த்திருப்பார் என உறுதியாகச் சொல்லலாம். ஏனெனில் பழத்திற்குப் பஞ்சாயத்துப் பண்ணிய பரமசிவன் குடும்பத்துக் கதையை ஒரு இளைஞர் நகைச்சுவையாய்ச் சொல்ல விசுவிற்கு ரொம்பவும் டென்சன் ஏறிவிட்டது. (விசுவிற்குள் சோ). உடனே இது ரொம்பத் தப்பு. போனா போகட்டும் இதை ஒரு ஹியூமரா எடுத்துக்கறேன். எனப் பொறுமினார். உடனே விசுவாசி ஒருவர் எழுந்து பரமசிவன் பெருமையை சமஸ்கிருத ஸ்லோகமாய் ஆவேசத்துடன் அவிழ்த்துவிட அதன் அர்த்தம் புரியாமலே அர்த்தம் கெட்டதானமாய் கை தட்டியது கூட்டம்.(சுத்தத் தமிழர்கள் !)

விவேகானந்தர் அமெரிக்கா போய் சகோதர, சகோதரிகளேன்னு அங்குள்ளவனுகளக் கூப்பிட்டதுக்கப்புறம் தான் அப்படி ஒரு சொந்தம் இருக்கறதே லோகத்துக்குத் தெரிந்தது என்கிற லெவலில் பேசிய பேச்சுக்களுக்குக் கை தட்டிய கூட்டம், சொந்த மண்ணில் பிறந்தவர்களைச் சாதி பார்த்து விலக்கி வைத்துவிட்டு வெளிநாட்டில் போய் வெள்ளைக் காரனைப் பார்த்து சகோதர, சகோதரின்னு கூப்புடறது கேனத்தனமில்லையா என்றெல்லாம் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இதுதான் நம்ப விசுவின் ஜனங்கள்.

www.padippakam.com



இட ஒதுக்கீடு குறித்து விசுவிற்கு ரொம்பக் கோவம். இடதுசாரியாக இருந்தாலும், வலதுசாரியாக இருந்தாலும் விசுவின் சாதிக்காரர்களுக்குள் ஒரு பொதுத்தன்மையைக் காண முடிகிறது. இன்னிக்கு கவர்ன்மெண்ட் ஆபீஸ்ல போய் நாலு வார்த்தை சேர்ந்தாற் போல் ரூல்ஸ் பேசினா போதும் எல்லாப் பயலும் கவுந்துருவான்க. ஏன்னா ஒருத்தனுக்கும் ஒன்னும் தெரியாது. எல்லாம் ஒதுக்கீட்ல வந்தவன்க என்றது விசுவின் செல்லப் பிராணி ஒன்று. இது போன்ற அயோக்கியத்தனமான கமெண்டுகள் தொடருமானால் விசுவின் அரட்டை அரங்கம் என்பதை விசுவின் அரட்டை அசிங்கம் என்பதாக மாற்றிக் கொள்ளலாம்.

அரசின் பெரும்பான்மையான துறைகளுக்குத் தலைமை வகித்துச் சென்று தோல்விக் குழிக்குள் தள்ளி தனியாருக்கு தாரை வார்த்துக் கொண்டிருப்பது ஒதுக்கீட்ல வராத விசு சாதிக்காரர்கள் என்பது வெளிப்படை. (வேண்டுமானால் இவர்களுடைய சாதிக்காரரான ஹர்ஷத் மேத்தாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.) இவ்வுண்மை இடஒதுக்கீடு குறித்த பல்வேறு சர்ச்சைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்திய வங்கிகளில் திருப்பிச்செலுத்தப்படாத கடன் ரூபாய் 52,000 கோடி. இவ்வளவையும் பெற்றுக் கொண்ட பெரிய நிறுவனங்களுக்கு முதலாளி எந்த சாதிக்காரன்? மாமூல் பெற்றுக் கொண்டு வாங்கிய கடனை வசூல் செய்யாமல் இருக்கும் வங்கித் தலைவர்களும், மிகப் பெரிய பொறுப்பில் இருப்பவர்களும் எந்த சாதிக்காரர்கள்? இவர்கள் அனைவரும் ஒதுக்கீட்ல வந்தவன்களா?

சாதிகள் இல்லையடி பாப்பான்னு சொல்லிக் கொடுக்கிற பள்ளிக் கூடத்தில் சேரும் போது மட்டும் சாதி கேக்குறாங்களே இது நியாயமா? - விசு வாசி பள்ளியில் சேர்க்கும் போது சாதியைக் குறிப்பிட விரும்பவில்லையெனில் சாதியற்றவர்கள் எனக் குறிப்பிட்டுக் கொள்ளும் உரிமை, சட்டப்படி உண்டு. எல்லாம் தெரிந்த ஏகாம்பரங்களான ஒதுக்கீட்ல வராத விசு சாதிக்காரர்களுக்கு இது கூடத் தெரியாதா என்ன. சுத்த யோக்கியர்கள். சாதி என்றால் என்னவென்றே தெரியாத பாப்பாக்கள். பள்ளியில் உன் சாதி என்ன என்று கேட்கும் பொழுது தெரியாது என்றல்லவா சொல்ல வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் அனேகமாக எல்லா தினசரிகளிலும் வெளியாகும் கல்யாணத்திற்கு ஆள் பிடிக்கும் விளம்பரங்களில் சாதி, குலம், கோத்திரம், புடலங்காய் என ஏகப்பட்ட கண்டிஷன்களுடன் வரன் தேடுவது கூட பள்ளியில் உன் சாதி என்ன என்று கேட்டதால் வந்த வினைதானா?

இட ஒதுக்கீட்டிற்காக சாதியைக் கேட்கக் கூடாது. என நியாயம் பேசுவது விசு மட்டுமல்ல. அவர் சாதிக்காரர்களால் நடத்தப்படும் முன்னனிப் பத்திரிக்கைகள் அனைத்துமே இதே விதமாகப் புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், இதே ஆட்கள், தப்பித்தவறி ஒன்றிரண்டு தலித்களுக்கு பதவி ஏதேனும் கிடைத்திருந்தால் சம்பந்தப்பட்ட நபர் தலித் இனத்தவர் எனக் கொட்டை எழுத்துக்களில் செய்தியை வெளியிடுகின்றன. அதே போல், கொலை, கொள்ளை போன்ற விஷயங்களில் எப்போதாவது தலித்துகள் சம்பந்தப்பட்டிருந்தால் உடனே அவ்விஷயத்தை முதல் பக்கத்திலேயே கொலையாளி ஒரு தலித் என கட்டம் கட்டி செய்தி வெளியிடப்படும்.

சாதிக் கர்மத்தைக் கண்டுபிடித்து வளர்த்ததுமில்லாமல் கொள்ளு-ன்னா வாயத் தொறக்கிற குதிரை கடிவாளம்னா மூடிக்கிற மாதிரி, சமூகங்களுக்குள் ஏற்ற தாழ்வு உண்டாக்கி தங்களை உயர்த்திக் கொள்ள சாதி வேண்டும். ஆனா, இட ஒதுக்கீடுன்னா தப்பு. இதுதான் விசுவாசிகளின் தத்துவம்.

இவர்களின் வழக்கமான இன்னொரு பல்லவி நான் பார்வர்டு காஸ்ட் சார். அதுனால எனக்கு சீட் கிடைக்கல. (உடனே விசு உச்! உச்!) ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும் பிற்பட்டவர்களுக்கான மொத்த ஒதுக்கீடு அம்பது சதம். மீதி அம்பது சதம் பொதுப் போட்டிக்கானது. அதுல யார் வேணும்னாலும் வரலாம். அதுல நெறயப் பேர் உங்காளுங்கதான். எனவே, சீட் கிடைக்காததற்குக் காரணம் பொதுப்போட்டியில நீங்க வெற்றி பெறாததுதான். பார்வர்டு காஸ்ட் மொத்த மக்கள் தொகைல மூணு சதம் தான். ஆனால் அரசுப்பணிகளில் நீங்க எவ்வளவு சதம்!! இது தவிர தனியார் துறைகளில் எவ்வளவு சதம்!! எனவே, நான் பார்வர்டு காஸ்ட்டாக்கும்னு ரொம்பப் பெருமையா வருத்தப்பட வேணாம்.

இட ஒதுக்கீட்டுக்கு எதிரான விமர்சனங்களில் பிற்பட்டவர்களும் பெருவாரியாகப் பங்கேற்பது கவனிக்கத் தக்கது. ஓட்டு அரசியலில் உள்ள செல்வாக்கு மற்றும் பண,படை பலத்தை அடிப்படையாகக் கொண்டு இட ஒதுக்கீட்டுப் பட்டியலில் இடம் பெற்றுவிட்ட இவர்கள் இதை அனுபவித்துக் கொண்டே மற்றொருபுறமாக இதை நையாண்டி செய்வதும் வழக்காயிருக்கிறது. சாதியை நிலை நிறுத்தும் பொறுப்பில் இவர்களுடைய பங்கு தான் தமிழ்நாட்டில் அதிகம். இவர்களைக் கடந்து வருவதே ஒடுக்கப்பட்டவர்களின் உடனடித் தேவையாகிறது.

பெண்கள் பிரச்சனைகளைப் பொறுத்தவரை ராஜாராம் மோகன் ராய் காலத்திற்கு முன்பிருந்த பழைய கலாச்சாரக் கருமாந்திரங்களை இன்னும் தூங்காமல் கொள்ளாமல் விழித்திருந்து விசுவாசமாய் காவல் காக்கிற காவலாளி நம்ம விசு.

படித்த பெண் ஒருவர் தன் கணவனால் கைவிடப்பட்டும் அவனுக்காக எத்தனை காலம் வேண்டுமானாலும் காத்திருப்பதாகச் சொல்லி மேடையிலேயே அழ ஆரம்பிக்க, நம்ப காவலாளியும் அழ, ஒரே அழுகை மயம். இது விசு மேடையா அல்லது சாவு வீடா என்கிற அளவுக்கு. அழுகையினூடே காவலாளி சொல்கிறார். பாருங்க அய்யா, இதுதான் நம்ப பொம்பளைங்க கலாச்சாரம். இதை மட்டும் எத்தனை காலம் ஆனாலும் மாத்தவே முடியாது.(வேறு சில சமயங்களிலும் இவர் இதுபோலச் சொல்வதுண்டு. பெண்ணுரிமை இயக்கத்தினர் கவனத்திற்கு) விசு என்ன நிரந்தர உயிரியா மாறாமலிருப்பதற்குச் சாட்சியம் கூற. எதுவும் மாறித்தான் ஆகவேண்டும். பெண்களின் இன்றைய நிலையும் பல மாற்றங்களுக்குப் பின் வந்ததுதான். இதுவும் மாறும். மாற வேண்டும். இது அறிவியல். எனவே, விசு வாசிகளுக்கு இது தேவையற்றது.

பொதுவாக அரசு வேலை குறித்து விசுவிற்குள் ஒரு எதிர்பார்ப்பிருக்கிறது. எங்கப்பா வெறும் நூத்துமுப்பத்துமூணு ரூபா பேங்க் பாலன்ஸ்ஸோட செத்துப் போன ஒரு நேர்மையான அரசு ஊழியர் என்கிறார். (விசு சார் இது தானா உங்க கோபத்துக்குக் காரணம்) இருந்தாலும் அரசு ஊழியர் யாரேனும் பேச எழுந்தாலே மனுசன் பாய்ந்து பிராண்டி விடுகிறார்.

மருத்துவர்கள், ஆசிரியர்கள் முதலானோர் வேலை நிறுத்தங்கற பேர்ல மருத்துவம் பார்க்க மறுக்கறது, பேப்பர் திருத்த மறுக்கறது இதெல்லாம் ரொம்பத் தப்பு. போராட்டம் அரசுக் கெதிராகவா? அல்லது மக்களுக்கெதிராகவா? - விசு வாசி.

சரியான கேள்விதான். ஆனா பல்வேறு விதமாப் போராடிப் பார்த்துட்டுத்தான் இறுதியில் வேலை நிறுத்தம் வருது. பிரச்சனை உச்சத்துக்குப் போகும் வரையிலும், அதற்குப் பின்பும் கூட வேடிக்கை பார்க்கிற அரசு குறித்து கொஞ்சம் திட்டக்கூடாதா? (இது எல்லாப் போராட்டங்களுக்கும் பொருந்தும்.) இது போன்ற பிரச்சனைகளைத் தீர்க்க மிகச் சிறந்த வழியொன்று உண்டு. அத்தியாவசியத் துறையைச் சார்ந்த ஊழியர்களுக்குப் பிரச்சனை என்றால் அவர்களுக்குப் பதிலாக விசு ஜனங்கள் போராட்டம் நடத்தி அவர்களுடைய கோரிக்கையை அரசுக்குப் புரிய வைக்கலாம். அதற்கு ரொம்பவும் ஆவேசப்படுகிற விசுவே தலைமையேற்று நடத்தலாம்.(நேரத்தைப் பொன்னாக மாற்றிக்கொண்டிருக்கிற நிர் வாகத்திற்குச் சொம்படிக்கிற உங்களால் இதெல்லாம் முடியுமா சாமி?)

படிப்பகம்

www.padippakam.com



இவர்களைப்பொருத்தவரையில் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள். நிறையப் பணம் சேர்த்தவர்கள். பணக்காரர்கள் அடிக்கடி எடுத்துக்காட்டாக காட்டப்படுவார்கள். இந்நிலைக்கு உயர அவர்கள் செய்த தகிடுதத்தங்கள் மூடி மறைக்கப்படும்.

வெறும் வெங்காய பஜ்ஜி சுட்டுக்கிட்டிருந்தவன் இன்னிக்கு எவ்ளோ பெரிய பணக்காரன் தெரியுமா? காரணம் உழைப்பு என்கிற பாணியிலான நிறைய கமெண்டுகளைக் கேட்க முடிகிறது. நாடு முழுவதிலும் ஆயிரக்கணக்கான பேர் வெங்காய பஜ்ஜி சுட்டு விற்கிறார்கள். (உண்மையாக உழைப்பவர்கள்) ஆனால் ஒரிருவர் மட்டும் பணக்காரன் ஆவது எப்படி? திட்டமிட்டு சரியா உழைக்கணும்னு சொல்வீர்களானால் திட்டம்னா என்ன? அதுவும் சரியான திட்டம்னா என்ன? போன்றவற்றை விளக்கினால் மற்றவர்களுக்கு உபயோகப்படும்.

இயந்திரங்களின் மூலம் உற்பத்தியை அள்ளிக் குவிக்க முடிகிற முதலாளியத்திற்கு இப்பொழுதெல்லாம் உழைப்பவர்களைவிட விற்பவர்கள்தான் அதிகம் தேவைப் படுகிறார்கள். விற்கத் தெரிவதே சிறந்த உழைப்பு என்கிற அதன் தத்துவத்திற்கு விசுவின் நிகழ்ச்சி ஒரு சாட்சி.

இவர்கள் ஓஹோ வெனப் புகழ்ந்து அதிகம் மார்க் போட்டுப் பாஸ் பண்ணி விட்ட சுய வேலை வாய்ப்பு, (பெரும்பாலும் சிறு தொழிலாகத்தான் இருக்க வேண்டும்.) உலக மயமாக்கல் போன்ற அரசின் கொள்கைகளால் அடையப்போகிற கதி கைதட்டிக் கொண்டிருக்கிற இவர்களுக்குத் தெரியுமா என்று தெரியவில்லை. இட ஒதுக்கீடு தவிர அரசின் கொள்கைகள் எதையாவது திட்டினா சாமி கண்ணக் குத்திடும் என்ற பயமோ?

விவசாயமே இந்தியாவின் மிகப் பெரிய தொழில். சுய வேலை வாய்ப்பு. விவசாயிகளுக்காகவே ஆண்டாண்டு காலம் கடும் உழைப்பைக் கொடுத்து இன்னும் துண்டு நிலமற்ற பரம ஏழைகளாக இருந்து வரும் பல கோடி விவசாயக் கூலிகளில் ஒருவரிடம் மேற்படி உங்கள் சுய தொழிலுக்கு மதிப்பெண் வழங்கச் சொன்னாலென்ன.( இதுக்காக யாருக்காச்சும் வேசம் கட்டி மேடைக்குக் கூட்டிட்டு வந்துறாதீங்க விசு சார்! நம்ப தொழில் தான் நாடகமாச்சே!)

பொதுவாக விசுவின் நிகழ்ச்சிகளில் மேற்பூச்சாக ஏழ்மையைக் கண்ட பரிதாபம், பெற்றோர்களையும் பெரியோர்களையும் மதித்தல், சுய முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம், முதலியவற்றைக் கொண்டதாகத் தோன்றினாலும் அதன் உள்ளடக்கம் சாதியம், மதவாதம் முதலானவை. மேற்கண்ட பிரச்சனைகளைப் பேசும் போது கண்களில் கண்ணீருடன் உணர்ச்சிகரமான பேச்சில் வியக்கின்ற எவரும் அதன் உள்ளடக்கத்தைக் கவனிப்பதில்லை. (சினிமாக்காரர்கள் ஆளுகிற தமிழகத்தில் இது ஒன்றும் அதிசயமில்லை தான்) இதில் பேசுகின்ற பேச்சாளர்களுக்கோ, விசுவிற்கோ இவர்களுடைய தனித்த பிரச்சனைகளைத் தவிர, அதற்கான சமூகக் காரணங்கள் தெரியவில்லை. அல்லது தேவை யில்லை.(விதிவிலக்குகள் வெகு சில)

அரட்டை அரங்கம் நிகழ்ச்சியில் பேச்சாளர்களின் கருத்துக்களுக்கெல்லாம் விசு பொறுப்பாக முடியுமா என்று கேட்கலாம். ஆனால், நிகழ்ச்சியை முதலிலிருந்து உன்னிப்பாக கவனித்து வருபவர்களுக்கு ஒரு உண்மை புரியும். இவருடைய சாதி, மத, வர்க்க நம்பிக்கைகளுக்கு (நடுத்தர வர்க்க, ஆதிக்க சாதி)உட்பட்டு பேசப்படும் பேச்சுக்களை மௌனமாகக் கேட்டுக் கொள்வதும், இடையிடையே வெரி குட் சொல்வதும், சற்று விலகிப் பேசுபவர்களைப் பேச விடாமல் அட்டேக் செய்வதும் இவரது வாடிக்கை. சினிமாவில் குழப்பிக் கொண்டிருப்பது போல இவர்கள் பேசுவதையும் குழப்பி விட்டு அமர வைத்து விடுவார்.

இறுதியாக, ஒரு வார்த்தை. பிற்பட்ட சாதி சன் டிவிக்கு முற்பட்ட சாதி கூட்டாளிகள் வரலாற்றுத் தேவையோ? ●

**வாசிக்கக் கிடைத்த கவிதை**

*உன் ஒவ்வொரு உறுப்பிலும்*
*ஒளிரும் நகைகளில்*
*ஏதோ ஒரு சில*
*எம் பெண்டிற்கு உரியதாய் இருக்கலாம்*
*முன்பொரு நாள்*
*நீ*
*கொடியங்குளத்தில் விளையாடிய*
*கள்ளம்போலீஸில் . . .*
*அரைஞாண் கயிற்றோடு*
*என் குழந்தையின் அரசிலையும்*
*களவு போயிற்று . . .*
*அன்புச் சகோதரி*
*அந்த அரசிலையின்*
*அகலமும் வடிவமும்*
*உன் ஆலிலைக்குப்*
*போதுமானதாக இருக்கிறதா?*

மு. மல்லன்.
**(தலித் 4 வது இதழ்)**

<u>உங்கள் கவனத்திற்கு</u>

* வாசகர்களின் படைப்புக்கள் ஆர்வமாக வரவேற்கப் படுகின்றன.

* நூல் விமர்சனம், நூல் அறிமுகம் ஆகியவற்றிற்கு ஒரு பிரதி அனுப்ப வேண்டும்.

* இதழைத் தொடர்ந்து நடத்த வாசிப்பவர்களின் பங்களிப்பு அவசியம். இல்வசமாகவே இவ் விதழைத் தொடர்ந்து படிப்பீர்களானால் . . . .இதழ் நின்றுவிடக்கூடும்.

* புதியதடம் முகவரிக்கு தங்களின் சிற்றிதழ்களை அனுப்பும் இதழாளர்களுக்கு மாற்று இதழாக புதியதடம் தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது.

* இதழ் கிடைத்தவுடன் ஒரு அஞ்சலட்டையில் இதழ் கிடைத்ததை உறுதி செய்து எழுத வேண்டுகிறோம்.

* கண்டதேவி தேரோட்டச் சிக்கல் தொடர்பான விரிவான கட்டுரைகளடங்கிய சிறு நூல் ஒன்றை புதியதடம் வெளியிட வுள்ளது. இந்நூல் வெளி வருவதில் ஆர்வமுள்ள அனை வரிடமிருந்தும் கருத்துக்களும், பங்களிப்புக்களும் வர வேற்கப் படுகின்றன.

www.padippakam.com



# மறுக்கப்பட்ட வரலாறு

# இரட்டைமலை சீனிவாசன்

## ஸ்டாலின் ராஜாங்கம்

நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்வார் "ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றி, மண்ணைப்பற்றி ஒரு நூறு ஆண்டுகால வரலாற்றையாவது தெரிந்து வைத்துக்கொள்ளவேண்டும் என்று மாவோ சொல்வார். ஆனால் தற்போது, அமெரிக்கா போன்ற நாடுகளில் கலை சம்பந்தமான பாடத்துறைகள் மூடப்பட்டு வருகின்றன. இந்த நிலை சுமார் 500 வருடகால வரலாற்றை மட்டுமே கொண்டுள்ள அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு வேண்டுமானால் சாத்தியமாயிருக்கலாம். ஆனால் ஏறத்தாழ அய்யாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றை தன்னகத்தே கொண்டியங்கும் தமிழ்மரபிற்கு ஏற்றதன்று. நாம் வரலாற்றை இழப்பதென்பது நம்மை நம் மண்ணை பண்பாட்டை இழப்பதற்கு ஒப்பானது" என்று சொல்லுவார்.

ஆனால் உண்மையிலேயே, நாம் நம்மைப் பற்றிய நூறு ஆண்டுகால வரலாற்றையாவது முழுமையாக உணர்ந்திருக்கிறோமா? என்ற கேள்வி எழுந்தால் என்ன பதிலைத் தரப்போகிறோம். அப்படியும் வரலாறுகளாய் அடையாளப்படுத்தப்படுபவைகளின் தன்மைதான் என்ன? உண்மையிலேயே அது நமக்கான வரலாறுதானா?

இங்கு கலைகளாயினும்,அரசியலாயினும், இலக்கிய மாயினும், எந்தச் சிந்தனைகளும் ஆளும் வர்க்கங்களின் நலன்களைக் கேள்விக்குள்ளாக்காத அளவிற்கு மட்டுமே, வரலாறுகளாக தொகுக்கப்பட்டு வந்துள்ளது என்பதையறிவோம்... இந்த மண்ணில் உரைக்கப்பட்ட வரலாறுகளைக் காட்டிலும் மறைக்கப்பட்ட வரலாறுகள் ஏராளம்... ஏராளம். . .!

குறிப்பாக நடந்த சாதீய வன் கொடுமைகள்கூட, வரலாற்றின் பக்கங்களில் சிறப்பானவையாக ஏற்றிவைக்கப்பட்டு பூஜிக்கப்படும் சூழலில், நாம் வரலாற்றை, உண்மை வரலாற்றை, ஆளும் சித்தாந்தங்களால் உச்சாணியில் வைத்துப் போற்றப்படும் வரலாறுகளை பாரதூரமின்றி தோலுரித்து, உழைக்கும் மக்களின் வரலாற்றை நிர்மாணிக்க வேண்டிய தேவை இருக்கிறது. காரணம், இன்று கட்டித் தொங்கவிடப்பட்டுள்ள பூச்சாண்டிகளில் எதுவுமே நமக்கான வரலாறுகளாக இல்லை. நமக்கான மொழி, கலை, அரசியல், உடை, பண்பாடு என்று எதுவுமே இல்லாமற் போனது.



அந்த அடிப்படையில், நாம் புதிய வரலாற்றை கட்டமைக்கும்முகமாய் நாம் ஆவணங்களை சேகரிப்பதிலோ, பாதுகாப்பதிலோ முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இனிமேலாவது விழிப்புடன் பணியாற்ற வேண்டிய தேவையெழுகிறது. ஏனெனில் நமது வரலாற்றை மீட்டெடுக்கும் பணியில் மிகப் பெரிய தடையாய் கிடப்பது நமது ஆவணப்படுத்தாத, தொகுக்காத முயற்சியுந்தான் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

குறிப்பாக, சென்ற 2000 ஆகஸ்ட் 15-ல் அஞ்சற்றலை வெளியிடப்பட்ட 'இரட்டைமலை சீனிவாசன்' குறித்த தகவல்களை அறியவேண்டிய ஏடுகளைப் புரட்டியபோது, நமக்கு மிஞ்சுவது ஏமாற்றந்தான். ஏனென்றால் "திராவிட இயக்கத்தின் வேர் இரட்டைமலை சீனிவாசன் தான்" என்று அஞ்சல்தலை வெளியீட்டுவிழாவில் பேசப்பட்டது. அப்படியென்றால் அவரைக்குறித்த வரலாறு என்பது இல்லாமற்போனது ஏன்? கூடவே திராவிட இயக்கத்தின் மற்றொரு வாலாய் முளைத்திருக்கும் ம.தி.மு.க. தொடங்கிய முதல் மாநாட்டில் கூட, ரெட்டைமலையின் உருவப்படம் திறந்துவைக்கப்பட்டு உரத்து பேசப்பட்டது. ஆனாலும் இவர் தலித் என்று கூறி ஓட்டு வங்கிக்காய் ஆளாய்ப்பறக்கும் முகமாகவே பேசப்பட்டார் என்று கொள்ளவேண்டியிருக்கிறது. இந்த வெற்று புரட்டல்களுக்கு மாற்றாக, அவரைக் குறித்த சரியான 'உருவத்தை' உருவாக்கத் தவறி, தருணங்களுக்காய் அவ்வப்போது தூசுதட்டப்படும் இவரது உருவப்படத்திறப்பையோ அஞ்சல்தலை வெளியீட்டையோ வேறெப்படிக் கொள்ளமுடியும்? கூடவே இருந்ததைப் பாதுகாக்கவும்கூட கவனம் செலுத்தப்படவில்லை என்பது எத்துணை வேதனையான உண்மை.

அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில் தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் குறித்து முதல்வர் "ரெட்டைமலை என்பது அவர் ஊர்ப்பெயர் இல்லை புலவரே, அப்பா பெயர். உண்மையில் அவர் ஊர் மதுராந்தகம் அருகிலுள்ள 'கோழியாளம்' என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று கூறியபோது, இன்று திராவிட இயக்க அரசியலில் அமைச்சர் பதவிவரை சென்றுங்கூட அவர்களது வரலாற்று அறிவு எந்த அளவுக்கு அமைந்திருக்கிறது என்ற வினா எழுகிறது. இதிலும் தமிழ்க்குடிமகன் ஒரு கல்லூரிக்கு பேராசிரியராயும், முதல்வராயும் இருந்தவர். இங்கு நமது நோக்கம் தெரியாமல் விட்ட நம்மையே குற்றஞ்சொல்வது அல்ல. மாறாக, இந்த அரசியலை முன்னெடுத்தவர்களுக்கே இதற்கான அரிய வாய்ப்பு கிடைத்தும், செய்யாமல் போன காரணந்தான் என்ன? ஒரு காலத்தில் சமூகத்தின் அனைத்து மூடத்தனங்களையும் எதிர்த்து, சமூக, அரசியல், கலை, இலக்கிய அளவிற் செயற்பட்ட ஓர் சமூக இயக்கம், பாராளுமன்ற அரசியல் அமைப்புக்குள் நுழைந்ததும், தாம் கைவிட்டுவிட்ட சாசுவதமான கொள்கை, அரசியல், கலை போன்ற நிலைகளை அல்லாமல் வேறெதைக் காட்டுவதாக கொள்ளமுடியும்?

ஏன் இன்று கொஞ்சமாவது அறிந்துகொள்ளமுடிகிற 'ரெட்டைமலை சீனிவாசன்' வரலாறுகூட அவராகவே எழுதி முற்றுப்பெறாமல் போன 'ஜீவித சரித சுருக்கம்' என்ற தன் வாழ்க்கை சரிதத்திலிருந்தே அறிந்து கொள்ளமுடிகிறது. முற்றுப்பெறாத காரணத்தால் இவரின் பிற்கால செயல்பாடுகள் குறித்தோ, சமகாலத்தில்(1945 வரை வாழ்ந்தவர்)எழுந்த சமூக இயக்கங்கள், நிகழ்வுகள் குறிப்பாக திராவிடர் கழகம், இந்தி எதிர்ப்புப்போர், நேதாஜியின் ராணுவக் கட்டமைப்பு குறித்தோ இவரது கருத்துக்கள் என்ன என்ற செய்திகளையும் முறைப்படி அறிந்துகொள்ள முடியவில்லை. இன்னுஞ் சொல்லப்போனால் "தமிழ் தேசிய கருத்தாக்கத்திற்கு முதலில் வித்தூன்றியவர்" என்று இன்று வேகமாக முன்னெடுக்கப்படுகிற அயோத்திதாசப்பண்டிதர் அவர்களின் 'இயற்பெயர்' குறித்து ஆளாளுக்கு பலமாதிரி கருத்து தெரிவிப்பது நமது வரலாற்று அறிவின் சூன்யத்தையே காட்டுகிறது.

இங்கு திராவிட அரசுகள்தாம் தொடர்ந்து ஆண்டு வருகின்றன என்றாலுங்கூட 'திராவிட இயக்கத்தின் கர்த்தா' என்று இயக்கந் தாண்டியும் பேசப்படும் ஈ.வெ.ரா-வின் சிந்தனைகள்கூட, தொகுக்க ப்படாதது வேதனையை அல்லவா காட்டுகிறது? ஆனால் பக்தவசலம் என்ற பெரியவருக்கு மணிமண்டபம்.(அதிலும் கல்வித்துறை இன மானப்பேராசிரியர் கையில். . .)ஏன்? இப்போதுதான் தமிழிலக்கிய வரலாறு எழுதப்படுவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. அதே போன்றநிலைதான் தமிழ் அகராதிக்கும். திராவிடஇயக்கத்தின் பழம் ஆட்களான சின்னக்குத்தூசி, க. திருநாவுக்கரசு சாத்தான்குளம்

படிப்பகம்

www.padippakam.com



அ.ராகவன் போன்ற இன்னுஞ்சிலரைக் கொண்டு, இந்தப்பணியைச் செய்துவிடலாம்தான். ஆனால். . . ஆனைமுத்து, எஸ்.வி.ராசதுரை போன்ற தனிமனிதர்களாலேயே இப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. திராவிட இயக்கத்தின் ஆரம்பக்காலத்தில் இருந்த பேனாக்கடை சோமு முதல் (பெயர் தெரியாத யாரோ. . .) சமீபத்தில் இறந்துபோன விருத்தாசலம்ராசு (திராவிட நாடு அடையும் வரை திருமணம் புரியமாட்டேன் என்று சொல்லி அவ்வாறே வாழ்ந்தவர்)வரை நாம் எப்படி புரியவைக்கப்போகிறோம் நமது எச்சங்களுக்கு?

தி.மு.க-வின் வரலாறு என்ற நூல் எழுதிய டி.எம்.பார்த்தசாரதி கூட எங்குமே ரெட்டைமலை குறித்துப்பேசாமல், ஒரேயொரு இடத்தில் மட்டும் பிரச்சாரத்தொனியில் மேம்போக்கான தகவல் தருகிறார். மற்றபடி ஆங்காங்கு கிடைக்கும் சிறுசிறு நூல்கள் இவரைப்பற்றி தாழ்த்தப்பட்ட எழுத்தாளர்களால் எழுதப்பட்ட அறிமுக நூல்களாலேயே அறியமுடிகிறது.

அந்த வகையில் மாசிலாமணியார், அயோத்திதாசப்பண்டிதர், ஜோதிபாபூலே, எம்.சி.ராஜா, என்.சிவராஜ், ரிவரண்ட் ஜான் பிள்ளை, அம்பேத்கார், ஈ.வெ.ரா போன்றோர் குறித்தும், எழுச்சி பெற்றுள்ள தலித்திய சிந்தனைகள், பெண்ணியம், சாதீய வன்முறை போன்றன பேசப்பட்ட சூழலிலும், பொதுவுடைமை இயக்க மற்றும் திராவிட இயக்க சிந்தனைகளும் விவாதிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியிலும் வாழுகிறோம். இந்தச் சூழலில் வந்தவரை லாபம் என்று கிடைத்த தரவுகளோடு உங்களோடு. . . . .!

2

இரட்டைமலை சீனிவாசனை நாம் புரட்சியாளராகச் சித்தரிக்க வேண்டிய அவசியமில்லை. அதேவேளையில் புறக்கணிக்கவும் தேவையில்லை. இவரை நாம் "சனநாயக, சீர்திருத்த மற்றும் மனித உரிமைகளுக்கான போராளியாகவே பார்க்க முடிகிறது" ஏனென்றால் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே சீனிவாசன் போன்றவர்கள் எழுந்தபோது "நமது போராட்டம் யாரை எதிர்த்து?" என்ற கேள்வி தாழ்த்தப்பட்ட தலைவர்களுக்கு மட்டுமே எழுந்திருக்க முடியும். ஏனென்றால், நாம் எந்த சமூகத்திற்காக, ஆங்கிலேயரிடம் போராடுகிறோமோ, அந்த சமூகத்திலே அங்கீகாரம் இல்லாதபோது, நடைமுறை கருதி எவரையாவது ஒருவரையெதிர்த்து, மற்றவரை சக கூட்டாளியாக்கிக் கொள்ள முடிந்தது. இந்தச் சூழலிற் 'தன்னை மனிதனாகக் கூட மதிக்காத' நிலைக்கு எதிராக, எழ வேண்டிய மனிதஉரிமைப்போராட்டம் முன்நின்றது. இந்த அடிப்படையில்தான், சீனிவாசன் முதல் நீதிக்கட்சி வரை தொடர்ந்து பெரியார் வரையிலான நிலையை நாம் அவதானிக்க வேண்டும்.

சனநாயகரீதியான அரசியற்கருத்துகள் தலையெடுக்கத் தொடங்கிய இந்த காலக்கட்டத்தில் *ரெட்டைமலை சீனிவாசன்* போன்றோர்களது நிலை, "ஆங்கிலேயர்களாலாவது நாம் கொஞ்சமாவது உரிமை அடைந்திருக்கிறோம்" என்ற மனோரீதியான நிலையில் இந்து சமூக ஆதிக்க சக்திகளுக்கு எதிர்ப்பாளராக தம்மை அடையாளப்படுத்த வேண்டிய தேவையெழுந்தது.

*சீனிவாசன்*,பண்டிதர் முதலானோர் பரந்துபட்ட இயக்கமாய் கட்டமையாவிடினும், அமைப்பாக திரளவேண்டும் என்ற அடிநிலை சிந்தனைகளைக் கிள விட்டவர்களாகவே புரிந்துகொள்ள முடிகிறது. 1851-ல் இரட்டைமலை சீனிவாசனால் தொடங்கப்பட்ட 'ஆதிதிராவிட மகாஜனசபை' என்ற அமைப்பு, அமைப்பாகத் திரளவேண்டிய தேவைகளின் ஆரம்ப கட்ட முயற்சிகள் எனலாம். அதாவது, மனுக்கொடுப்பது சின்னசின்ன பிரச்சனைகளை தீர்த்துக்கொள்வது, மாநாடுகள் நடத்தி சலுகைகளைப் பெறுவது போன்ற நிலைகளில் இருந்ததையே நாம் இவ ் பார்க்க முடிகிறது.

ஆனால் தாம் அரசிடம் கொடுக்கும் மனுக்களை அப்படியே பிரசுரமாக மக்களிடம் கொண்டு சென்ற இவரின் உத்தி இவரின் சந்தேகிக்க இயலா அரசியல் நேர்மையைக் காட்டுகிறது. மேலும் சுமார் 110 ஆண்டுகளுக்கு முன்பே, முற்றிலுமாக ஆதிக்க சக்திகளாற் புறக்கணிக்கப்பட்ட "பறையன்" என்ற இனத்தின் பெயரால் 1893-லேயே மிக தைரியமாக சரியான புரிதலோடும், தளத்தோடும் ஓர் இதழை நடத்தினார் என்பது புருவம் உயர்த்த வைக்கும் செய்தி அல்லவா? உண்மையில் 'பறையன்' என்ற பெயருக்கு 'மண்ணின் மக்கள்' என்ற இலக்கிய விளக்கம் அளித்தவர் இவர். இன்று அட்டணையில் குறிப்பிடப்படுகிற 86 தாழ்த்தப்பட்ட சாதிகளையும் ஆதி திராவிடர் என்ற பெயரிலேயே பயன்படுத்தியிருக்கிறார்.

1859-ல் பிறந்த சீனிவாசன். கல்லூரியை கோவையில் முடித்திருக்கிறார். இங்கு பயின்ற 400-வரில் 10 பேர் மட்டுமே பிராமணர் அல்லாதோர். 10 பேரிலும்இவர் மட்டுமே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர். குறிப்பாக இவரையே முதல் தலித் பட்டதாரி என்றும் குறிப்பிடுகின்றனர். (ஆனால் தமிழ் இதழியல் வரலாறு எழுதிய மா.சு.சம்பந்தன் படிக்கவில்லை என்கிறார். அந்தோ அந்தரத்தில் தொங்கும் நம் சரித்திர அறிவு!)

படிப்பை முடித்த பிறகு நீலகிரியில் அய்ரோப்பிய கம்பெனி ஒன்றில், 10 ஆண்டுகள் கணக்கராக பணியாற்றியிருக்கிறார். குறிப்பாக இவருக்கு அரசியல் கருத்தாக்கம் துவங்கிய காலகட்டமும் இங்கேயே என்று சொல்லலாம்.

1916-களில் நீதிக்கட்சிக்கு எதிராகவும், பார்ப்பனர்களுக்கு ஆதரவாகவும் வரிந்துகட்டிக்கொண்டு பணிசெய்த ஹோம்ரூல் இயக்கத்தின் ஆரம்ப பரிணாமமாய் விளங்கிய பிளாவட்ஸ்கி அம்மையார், கர்னல் ஆல்காட் ஆகியோர்களை 1882-களில் நீலகிரியில் சந்தித்து பழகும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அன்றைய ஆங்கில அரசிடம் மனுக் கொடுப்பது குறித்தும், தீண்டாமை ஒழிப்பு குறித்தும் இவரது செயற்பாடுகளை பின்னரே காணமுடிகிறது.

1893-ம் ஆண்டு சென்னை ராயப்பேட்டை வெஸ்லியன் பள்ளியில் தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மலைவாழ் மக்களின் மாநாட்டை இந்திய துணைக்கண்டத்தில் அக்காலக்கட்டத்தில் முதன்முறையாக நடத்தியிருக்கிறார். (மாநாட்டின் பெயர் கவனிக்கத்தக்கது. அனைவரையும் ஒருங்கே கணித்த சீனிவாசனையே நாம் பார்க்க முடிகிறது.) அன்றைய பிரிட்டிஷ் அரசினால் வகுக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை மீட்கும் பொருட்டு, 1894-மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுத்து நிலமீட்பு இயக்கத்தின் முன்னோடியாக இருந்திருக்கிறார். 1895-ல் சென்னைக்கு வருகை தந்த வைஸ்ராய் லார்டு எல்சினிடமும், கவர்னர் லார்டு வென்லாக் என்பவரிடமும், சீனிவாசன் ஊர்வலமாகச் சென்று குறைகளை நீக்கக் கோரி மனுக்கொடுத்தார். மேலும் 1895-ம் ஆண்டு அக்டோபர் 7-ல் சென்னை விக்டோரியா மண்டபத்தில் தாழ்த்தப்பட்டோர் மாநாடு நடத்தியதாகத் தெரிகிறது.

1904-ம் ஆண்டு இங்கிலாந்து பயணப்பட்டு கப்பலில் செல்லும்போது திசைமாறிய கப்பல் தென்னாப்பிரிக்கா சென்றதாகக் கூறப்படுகிறது. இரட்டைமலை சீனிவாசன் தென்னாப்பிரிக்கா 'நெட்டலில்' நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியிருக்கிறார். காந்தி இங்கு வழக்கறிஞராக சமகாலத்தில் பணியாற்றி இருக்கும்போது 'மோ.க.காந்தி' என்றுதமிழ் கையெழுத்தைக் கற்றுக்கொடுத்தார். கிழக்கு ஆப்பிரிக்காவிலும் இரண்டு ஆண்டுகள் இருந்தாராம். 1920-களுக்குப்பிறகு சென்னை திரும்பினார். அரசியலில் நேரடிப்பங்களிப்பு 1921-ல் இவர் நீதிக்கட்சியில் இணைந்த பிறகே தோன்றுகிறது.

www.padippakam.com



3

1923-ம் ஆண்டு முதல் 1938 வரை சென்னை மாகாண சட்டப்பேரவையின் மேலவை உறுப்பினராக (எம்.எல்.சி) பணியாற்றிய காலங்களில் சில சீர்திருத்த தீர்மானங்களைக் கொண்டு வந்ததோடு, தொடர்ந்து போராடி வெற்றியும் பெற்றிருக்கிறார். குறிப்பாக 1924-ம் ஆண்டு ஆகஸ்ட் 24-ல் தாழ்த்தப்பட்ட மக்கள் சாலைகளில் எல்லா மக்களோடும் சமமாய் நடக்கவும், பொதுக்கிணறுகளை பயன்படுத்தவும், பொது இடங்களில் பிரவேசிக்கவும் சென்னை மாகாண சட்டமன்றத்தில் இவர் கொண்டுவந்த தீர்மானம் குறிப்பிடத் தக்கது.

இந்த தீர்மானத்தின் விளைவாய் 1925-ம் ஆண்டு செயின்ட் ஜார்ஜ் போர்ட் கெஜட்டின் 1ஏ,2660 நெம்பர் எல்.எக்ஸ்.எம்-ன் கீழ் இது அரசாணையாக பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த தீர்மானம் *சீனிவாசனின்* துணைவியார் அரங்கநாயகி அம்மையாரின் தூண்டுதலாலேயே கொண்டுவரப் பட்டதாம். அதனால் இந்த அம்மையாரின் சமாதியின் கல்வெட்டில்கூட இந்த அரசாணை அப்படியே பொறிக்கப் பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இதற்குப்பிறகே 1929-30-களில் சுப்பராயன் கொண்டு வந்த தாழ்த்தப்பட்டோர் மீதான சீர்திருத்த தீர்மானங்களுக்காய், சுப்பராயன் பதிவு செய்யப்பட்ட அளவுக்கு, நீதிக்கட்சியினாலேயே கூட *சீனிவாசன்* பேசப்படாததையே பார்க்க முடிகிறது. நீதிக்கட்சி வெளியிட்டுள்ள பொன்விழா மலரில் சீனிவாசன் படம் வெளியிடப்பட்டதாக க. திருநாவுக்கரசு எழுதியிருக்கிறார். இந்த தீர்மான வெற்றிக்குப்பிறகு ஆங்கில அரசு இவருக்கு 1926-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் நாள் "இராவ் சாகிப்" பட்டம் வழங்கியிருக்கிறது.

1927-ம் ஆண்டு இரட்டைமலை *சீனிவாசன்* கல்வியின் அவசியத்தை உணர்ந்து *தாழ்த்தப்பட்டோர் கல்விக் கழகத்தை* துவக்கியிருக்கிறார். 1928-ஆம் ஆண்டில் *சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் முன்னனி(பெடரேஷன்)* என்ற பெயரில் கூட்டமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்.

1930-ல் லண்டனில் முதலாம் வட்டமேஜை மாநாடு நடைபெற்றது. காங்கிரஸ் இதைப் புறக்கணித்தது. மொத்தம் 89 பிரதிநிதிகளில் 53 பேர் இந்திய பிரதிநிதிகள். தாழ்த்தப்பட்டோர்கள் சார்பாக, அம்பேத்கரும், ரெட்டைமலை *சீனிவாசனும்* கலந்து கொண்டனர். இங்கே ஒவ்வொரு பிரதிநிதியும் அய்ந்தாம் ஜார்ஜ் மன்னரிடம் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டபோது, சீனிவாசன் மட்டும் தனது கோட் பையில் நான் *பறையன், தீண்டப்படாதவன்* என்று எழுதிய அட்டையைத் தொங்கவிட்டுக்கொண்டு கைகுலுக்க மறுத்து தள்ளி நின்றுகொண்டு, தனது சமூகத்தில் தாங்கள் படும் இன்னல்களை உணர்த்தினார். இந்த மாநாட்டில் திசம்பர் 23-ல் தாழ்த்தப்பட்டோர்க்கு அரசியல் அதிகாரம் வழங்க வேண்டும்; வயது வந்தோர்க்கு வாக்குரிமை வழங்க வேண்டும்; சட்டபேரவையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்.

1931-ம் ஆண்டில் இரண்டாம் வட்டமேஜை மாநாடு நடைபெற்றபோது காங்கிரஸ் பங்கேற்றது. காந்தியும், சரோஜினி அம்மையாரும் கலந்து கொண்டனர். அம்பேத்காரும், சீனிவாசனும் தாழ்த்தப்பட்டோக்கு தனி இட ஒதுக்கீடு, தனி வாக்குரிமை முதலியவற்றை மாநாட்டில் வற்புறுத்தினர். "எக்காரணத்திலும் பூர்ஷ்வா இந்துத்துவா சமூகத்தோடு தாழ்த்தப்பட்டோர் உரிமையோடு வாழவே முடியாது" என்று இவர்கள் வற்புறுத்திய வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நமக்குக் காட்டுகிறது. இதை காந்தி "இந்து சமூகத்தை இரக்கமற்ற வகையில் பிளவுபடுத்துவதாகும்" என்று கடுமையாக எதிர்த்தார். இது குறித்து இறுதியான பொது உடன்பாடு ஏதும் எட்டப்படவில்லை. இது குறித்து இறுதி முடிவெடுக்கும் உரிமை பிரிட்டன் தலைமை அமைச்சருக்கு வழங்கப்பட்டது.

ஆனால் இதற்கிடையில் காந்தி 11-3-1932-ல் பிரிட்டன் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் "தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு தனித்தொகுதி உருவாக்கும் முடிவினை மேன்மை தாங்கிய மன்னரசு அறிவிக்குமானால் நான் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க நேரிடும் என்பதை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று எழுதியிருந்தார். பிரிட்டன் பிரதமர் இதற்கு பதில் கடிதம் எழுதினார்.

1932-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17-ம் நாள், பிரிட்டன் பிரதமர் ராம்சே மெக்டொனால்ட் வட்டமேஜை மாநாட்டின் முடிவாக வகுப்புவாரி இடஒதுக்கீடுக் கொள்கையை(Communal Award)அறிவித்தார். ஒரு அரசியல் ஆயுதம் என்கிற முறையில் பார்க்கும் போது இதன் மதிப்பு கணிப்பிற்கு அப்பாற்பட்டது. ஆனால் குறிப்பிட்டபடியே காந்தி தனது உண்ணாவிரதப் பூச்சாண்டியை 20.09.1932 செவ்வாய் - அன்று துவக்கினார்.

தொடர்ந்து பார்ப்பன பத்திரிக்கைகள் எல்லாம் அம்பேத்கரை தேசத்துரோகியாக சித்தரித்து வெளியிட்டது. காங்கிரஸ் பரபரப்புடன் காந்தியை காப்பாற்றவும், தாழ்த்தப்பட்டோருக்கான கொஞ்சநஞ்ச உரிமையையும் காவு கேட்கத் தயாரானது. நாடெங்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை எதிர்த்து, பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டது. இந்துமதத்தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களும் அம்பேத்காருக்கும் காந்திக்கும் இடையே நடையாய் நடந்தனர்.

ஆனால் இதே சம காலத்தில், குருவாயூர் கோயிலில் தாழ்த்தப்பட்டோரை அனுமதித்தால் ஒழிய, உண்ணாநோன்பை நிறுத்த மாட்டேன் என்று 20.09.1932-ம் நாளில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்ட (காந்தியவாதியாயிருந்தும்) *கேளப்பன்* என்பவரின் உண்ணாநோன்புக்கு எத்தனைபேர் உபவாசம் புரிய வந்தார்கள்? என்பது கவனிக்கத்தக்கது.

அம்பேத்கரை சிக்கலில் மாட்டிவிட இந்தியாவின் பல்வேறு முனையிலிருந்தும் கண்ணிகள் பின்னப்பட்டன. இந்த வேளைகளில் அம்பேத்கருடன் இருந்ததோடும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ கொள்கையின் முக்கிய பங்களிப்பையும் செய்பவராகவும் *இரட்டைமலை சீனிவாசன்* இருந்தார்.

ஆனால் தாழ்த்தப்பட்டோர்க்கான இந்த உரிமையை வரவேற்றும், அம்பேத்கர் மற்றும் சீனிவாசனையும் ஆதரித்தும் எழுந்த குரல்களுள் தென்னகத்தின் ஈ.வெ.ரா., சிங்காரவேலர் ஆகியோரின் குரல் குறிப்பிடத்தக்கது.

வட்டமேஜை மாநாடு முடிந்தால் கவலைப்பட வேண்டியதில்லை என்ற பெயரிலான தலையங்கத்தில் (குடியரசு 18.10.1931), "வட்டமேஜை மாநாட்டில், காந்தி, இந்து மகாசபைத் தலைவர் போலவே நடந்து கொண்டார். திரு. மாளவியாவுக்கு பார்ப்பனீயத்தைக் காப்பாற்ற எந்த அளவிற்கு அக்கறையுண்டோ, அதுபோலவே பார்ப்பனீயத்தை ஒழித்து, மனிதத்தன்மைபெற திரு. அம்பேத்கருக்கும், திரு. சீனிவாசனுக்கும் அக்கறை உண்டு" என்று தீட்டப்பட்டது. தாழ்த்தப்பட்டோரின் வெற்றி-தோல்வி இந்த உரிமையையே சார்ந்திருப்பதாய் இவர்கள் கருதினர்.

ஆதிதிராவிட மகாஜனசபைக் கூட்டம், சென்னை கடற்கரையில் நடந்தபோது, அம்பேத்கர், சீனிவாசனை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்தில் சுயமரியாதை இயக்க தங்கராஜா, அ. பொன்னம்பலம் ஆகியோர் பேசினர்(குடியரசு 18.10.1931)சுயமரியாதை இயக்கத்தினர் பங்கெடுத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



சைமன் குழுவை புறக்கணிக்கும் காங்கிரஸ், இந்தியா சார்பில் சைமன் குழுவில் பங்கேற்க எம்.சி.ராஜா, வீரய்யன் போன்ற தாழ்த்தப்பட்ட தலைவர்களை போட்டால் பார்ப்பனர்கள் ஏற்பார்களா? ஏற்கமாட்டார்கள். ஏனெனில் 'அவர்களுக்குத் தேவை பார்ப்பனர்களுக்கு பிரதிநிதித்துவம்' என்று சைமன் குழுவை காங்கிரஸ் புறக்கணித்தபோது, கற்பனை சித்திரம் தீட்டிய சுயமரியாதை இயக்கம், எம்.சி.ராஜா பார்ப்பனரின் கைப்பாவையாக மாறிவிட்டபோது (இது குறித்து பின்னர் பார்ப்போம்) ரெட்டைமலை சீனிவாசனையே தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதியாக மதித்தது என்பது கவனத்தில் இருத்தவேண்டியது. "இது தாழ்த்தப்பட்டோருக்கான துரோகம்" என்று காந்திக்கு காட்டமாய் தெரிவித்தார் சீனிவாசன். தனஞ்செய்கீர் என்பவர் கூறுவதைப்போல மிகவும் ஆபத்தான கொடியதோர் ஆயுதத்தைக் காந்தி ஏந்தினார்.

அம்பேத்காரை இசைய வைக்க வேண்டும் என்பதில் உறுதியாயிருந்த பார்ப்பன பனியா வர்க்கம் எப்போதும் தனது நெஞ்சுரம் இல்லாத முகமாய், தாழ்த்தப்பட்ட தலைவர் என்று எம்.சி.ராஜாவை தம் கைப்பாவையாக்கிக் கொண்டு (இன்றும் இப்படித்தானே) தனது நரித்தந்திரத்தை நிகழ்த்தத் தொடங்கியது. தனித்தொகுதி கோரிக்கையை முழுமையாக ஆதரித்த இவரைக்கொண்டே, இந்த உரிமைக்கெதிராக கொம்பு சீவிவிட்டு, அவர்களுக்குள்ளேயே மோதட்டும் என்று தனது துரோகத்தனத்தை பறைசாற்றிக் கொண்டது காங்கிரசும், இந்துமகாசபையும்.

எம்.சி.ராஜா அகமதாபாத்தில் போட்டி மாநாடு ஒன்றை நடத்தியதற்கு, காங்கிரசின் முழு ஆதரவிருந்ததை நாம் மறந்துவிடக்கூடாது. "புனா ஒப்பந்தத்திற்கு அய்ந்து மாத காலத்திற்கு முன்னரே தனித்தொகுதி முறை வேண்டாம் என்று இந்து மகாசபைத் தலைவர் மூஞ்சேயுடன் உடன்பாடு கண்டவர் எம்.சி. ராஜா. வட்டமேசை மாநாட்டிற்கு அம்பேத்கார், ரெட்டைமலை சீனிவாசன் தேர்வு செய்யப்பட்ட பிறகு அதிருப்தியிலிருந்த இவரை சாதி இந்துக்கள் பயன்படுத்திக் கொண்டனர்" என்று 1937-ல் குறிப்பிடுகிறார் அம்பேத்கார்.

காந்தியின் உண்ணாநோன்பு குறித்து அம்பேத்கர் கூறியிருப்பது அவரது மனநிலையை மிகச்சரியாய் காட்டுகிறது. "இயற்கையாக அந்த நேரத்தின் நாயகனாக (அ)கதையின் வில்லனாகக் கருதி அனைத்துக் கண்களும் என் பக்கம் திரும்பின" என்கிறார் அவர். கஸ்தூரிபா காந்தியின் 'உயிர்ப்பிச்சை தாருங்கள்' என்ற உருக்கமான வேண்டுகோள் வேறு.

செப்டம்பர் 24-ந்தேதி மாலை *பூனா ஒப்பந்தம்* என்ற துரோக ஒப்பந்தம் கோடானுகோடி தாழ்த்தப்பட்டோரின் அழுக்கு நீரில் மினுமினுத்தது. இதன் மூலம் தாழ்த்தப்பட்டோர் தங்களுக்கு கிடைத்த இரட்டை வாக்குரிமையை இழக்கின்றனர். இந்த ஒப்பந்தத்தில் 23 பேர் கையெழுத்திட்டனர். இவர்களில் 8 பேர் பிராமணர், 9 பேர் உயர்சாதி இந்துக்கள், அம்பேத்கர், சீனிவாசன், எம்.சி.ராஜா, பி.பாலு, பி.என்.ராஜ்போஜ், கவாய் ஆகிய ஆறு பேரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.

ஒப்பந்தம் கையெழுத்தான மறுநாள் 25.09.1932-ல் பம்பாய் வணிக சங்கக் கட்டிடத்தில் கையெழுத்திட்ட தலைவர்கள் அனைவரும், கலந்து கொண்ட ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. உண்ணாவிரதம் முடித்த காந்தி தாழ்த்தப்பட்டோர் தலைவர்களுக்கு நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டபோது அம்பேத்கர், சீனிவாசன் ஆகியோர்க்கும், எம்.சி.ராஜா குழுவினர்க்கும் தனித்தனியே நன்றி தெரிவித்தது, தாழ்த்தப்பட்டோர் பிளவை அங்கீகரித்ததோடு, தொடரவும் செய்தா் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகளில் அம்பேத்கருடன் இரட்டைமலை சீனிவாசன் இருந்தார். எம்.சி.ராஜா, பி.பாலு, கவாய், ராஜ்போஜ் முதலானோர் மற்றொரு அணியாய் இருந்தனர். வட்ட மேஜை மாநாட்டில் தனது வாய்ப்புகளை சீனிவாசன் பறித்துக்கொண்டதாக எம்.சி.ராஜா கருதினார்.(பின்னர் எம்.சி.ராஜா அம்பேத்காரிடமே வந்தார் என்பது குறிப்பிடத்தக்க செய்தி)

"காந்தி வாதாடி வெற்றி பெறுவதைத் தவிர்த்து உண்ணாவிரதம் இருப்பது வீரத்தன்மையை இழந்து இரக்கத்தைத் தேட வேண்டியவரானார் என்பதைக் கண்டு மனமிரங்கி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டேன். இருபது வருடங்களாக அவர் கிளர்ச்சி செய்து வந்தும் ஜாதி இந்துக்களின் கல் மனதினின்று நார் உறிக்க அவரால் முடியவில்லை. . . ." என்று 1939-ல் ரெட்டைமலை சீனிவாசன் எழுதினார். இதை இந்திய தேசியத்தை அங்கீகரிக்கும் நேரு தம் சுயசரிதையில் குறிப்பிடும்போது "அரசியல் பிரச்சனை ஒன்றிற்கு, மதத்தொடர்பான, உணர்வுபூர்வமான அவரது அணுகுமுறை எனக்கு கோபத்தை உண்டாக்கிற்று. அது தொடர்பாக கடவுளை அடிக்கடி குறிப்பிடுவதும் எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொல்வதை எங்கேயும் பொருத்தலாம்.

ஆனால் ஒப்பந்தம் முடிந்தபோது தமிழகத்திலிருந்து முழக்கம் உக்கிரமாய் எழுந்தது. *தேசாபிமான பட்டத்திற்கும், பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் புகழ்ந்து எழுதுவதற்கும் ஏமாந்த சில தீண்டதகாத தலைவர்கள்* என்று எழுதியது குடியரசு நாளிதழ். இவ்வாறு புனா ஒப்பந்தத்தில் முக்கியப் பங்காற்றினார் சீனிவாசன். ஆனாலும் சீனிவாசன் அம்பேத்கரோடு கூர்மையாக வேறுபட்ட நிகழ்வுகளும் உண்டு. குறிப்பாக அம்பேத்கர் "நான் இந்துவாக சாகமாட்டேன்" என்று கூறிவிட்டு, மத மாற்றம் குறித்துப் பேசியபோது "நாம் முதலில் இந்துக்களே அல்ல, இந்துக்களாய் இருந்தால்தானே மதம் மாற. நாம் மண்ணின் தொல்குடிகள்" என்றார்.

அதே போலவே கோயில் நுழைவுப்போராட்டங்களும் மாற்றங்களைத் தந்துவிடாது என்று கருதினார். இவரது பணிகளைப் பாராட்டி 1936-ல் சனவரி 1-ம் நாள் திவான் பகதூர் பட்டம் கொடுக்கப்பட்டது. 1937-ம் ஆண்டு சூலை 15-ம் நாள் ராஜாஜி முதல்வராக இருந்த சட்டமன்றத்தில் *சமீன்தார்களின் நிலங்களை உழவர்கள் கைப்பற்ற வேண்டும்* என்று பேசிய தன்மையைக் காணமுடிகிறது. மேலும் மாவட்ட, மாநில தாழ்த்தப்பட்டோர் ஆலோசனைக் குழுவில் நியமன உறுப்பினராய் பணியாற்றி இருக்கிறார். மேலும் 1939-ம் ஆண்டு அக்டோபர் 8-ல் ஈ.வெ.ரா. கூட்டிய காங்கிரஸ் அல்லாத இயக்கங்களின் கூட்டத்தில் எம்.சி.ராஜா, என்.சிவராஜ் ஆகியோரோடு கலந்து கொண்டார்.

1939-ம் ஆண்டு திரு.வி.க. இவருக்கு 'திராவிட மணி' என்ற பட்டத்தை வழங்கியுள்ளார். இதற்குப் பிறகு இவரது செயற்பாடுகளை அறியமுடியவில்லை. 86 வயதில் 1945 செப்டம்பர் 18-ல் மரணம் அடைந்தார். இவ்வளவும் நிகழ்ந்த பிறகும், சமரசப் போக்கும், போராட்ட குணமும் இழையோடிய போதிலும் அந்தக் காலகட்டத்தில் இவரின் அரசியல் தொடர்புகள், அரசியல் சிந்தனைகள், இவருக்குக்கிடைத்த அரசியல் கருத்துக்கள், மேலாக இவர் பொருளாதார ரீதியில் அடைந்திருந்த மேட்டிமை ஆகியவற்றை அவதானித்து இவரைக் கணிக்க முடிகிறது. ஆனாலும் அன்றைய நிலையில் போராட்டச் சூழல் மிக இறுக்கமாகவும் அதனை உடைக்க கடுமையாக போராட வேண்டியதாகவும் இருந்தது. ஒரு சம்பவத்தைச் சுட்டுவது இங்கே சரியாக இருக்கும். தேசிய விடுதலைப்போராட்டத்தின் போர் வாளாக தன்னை ஏற்றிக்கொண்ட சுதேசமித்திரன் இதழுக்கு பறையன் இதழின் முதல் இதழ் திறனாய்விற்காக அனுப்பி வைக்கப்பட்டது. அப்போது அவ்விதழின் ஆசிரியராக சி.ஆர். நரசிம்மன் இருந்தார். அவரது மேசையின் மீதிருந்த 'பறையன்' ஏட்டை கையால் தொடாமல் கட்டைப்பேனாவால் புரட்டிப்பார்த்தாராம் என்று க.திருநாவுக்கரசு சொல்கிறார். இந்தச் சம்பவம் சாதிக்கொடுமையின் உச்சத்தையே காட்டுகிறது.

www.padippakam.com



மேலும் தேசியத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்ட இன்றைய போலி சுதேசிகள் "சீனிவாசன் மட்டும் தான் ஆங்கிலேயரிடம் அதிகாரம் பகிர்ந்து கொள்ளத் துடித்தார்" என்று கூறி தலித் தலைவர்களை பிடுங்கித் திண்பது என்பது சுயநலம். இவர்களின் யோக்கிய மூட்டையை அவிழ்த்துவிட்டால் நாறிப்போகும். காங்கிரஸ் கட்சியில் இருந்த சுயராஜ்ய கட்சியினர் காந்தியின் ஒத்துழையாமையைக் கைவிட்டு சட்டமன்றங்களில் நுழைந்தபோது சட்டமன்றங்களின் செயல்பாட்டை முடக்கிவைத்து, உள்ளிருந்து ஒத்துழையாமை செய்யப்போவ்தாக கூறினார்கள், இன்றைய திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சிக்ளைப்போல. இதற்கு மேல் மோதிலால் நேரு பிரிட்டானிய அரசின் ராணுவ ஆலோசனைக்குழு உறுப்பினராக இருந்தது மறக்கக்கூடிய ஒன்றல்ல. 1923 தேர்தலில் மத்திய சட்டமன்றத்தின் 101 இடங்களில் 41 இடங்களைக் கைப்பற்றியது சுயராஜ்யக்கட்சி. ஆனாலும் தமிழகத்தில் வெற்றிபெறவில்லை என்பது வேறு விஷயம். இவ்வாறு பார்ப்பன மேலாதிக்க அரசியலுக்கு புகலிடமாய் சுயராஜ்யம் என்ற கோஷமும், சுயராஜ்ய இயக்கமும், சுதேசமித்திரன், சுயராஜ்யம் போன்ற இதழ்களும் இருந்தன. ஒத்துழையாமையைப் புறக்கணித்து சட்டமன்றத்திற்குள் சென்றதை மேற்கண்ட இதழ்கள் ஆதரித்ததை நாம் கணக்கில் கொள்ள வேண்டும். அப்படியென்றால் பட்டம், பதவிக்கு அலைபவர்கள் என்று நீதிக்கட்சியையும், திராவிடத்தையும், தலித் தலைவர்களையும் விமர்சிக்கும் மேலாதிக்க உணர்வு கொண்ட இவர்களின் நேர்மைதான் என்ன?

ஒத்துழையாமை இயக்கத்தை புறக்கணித்து ராஜினாமா செய்து போனவர்தானே தீரர்.சத்தியமூர்த்தி. "சைமன் குழுவை இன்று பகிஷ்கரிக்கும் இவர்கள் நாளை விருந்து கேளிக்கைகளில் கலந்து கொண்டு துரைத்தனத்தாருடன் பேசி காரியத்தை சாதித்துக் கொள்வார்கள்" என்று கைவல்யம் சாமியார் சொன்னது எத்தனை உண்மையானது என்பதை 1947-க்குப் பிறகு கண்கூடாகக் கண்டோம், காண்கிறோம். இதுமட்டுமல்ல 1871-லிலேயே வெளிவந்ததாகச் சொல்லப்படுகிற பஞ்சமன் என்ற இதழின் வரலாறு குறித்தும் பதிவுகள் கிடையாது. ஆக இரட்டைமலை சீனிவாசன் போன்றோரின் வரலாறு மறக்கப்பட்ட,மறைக்கப்பட்ட வரலாறு மட்டுமல்ல. மறுக்கப்பட்ட வரலாறுங்கூட!

***உதவிய நூல்கள்:***


1. தமிழ் இன மாணவர் முழக்கம்
2. பறையர் குரல்
3. தலித் முரசு (செப்டம்பர் 2000)
4. திவான் பகதூர் தாத்தா ரெட்டைமலை சீனிவாசன்-அம்பேத்கர் ப்ரியன்
5. தமிழக தலித் முன்னோடிகள்
6. தமிழ் இதழியல் வரலாறு-மா.சு,சம்பந்தன்
7. திராவிட இயக்க வேர்கள்-க.திருநாவுக்கரசு
8. பூனா ஒப்பந்தம் ஒரு சோகக்கதை- சிவக்குமரன்
9. சமதர்மம்; சுயமரியாதை; பெரியார் -எஸ்.வி.ராசதுரை-வ.கீதா
10. ஜீவிதசரிதசுருக்கம்(சுயசரிதை)- ரெட்டைமலை சீனிவாசன்
11. திமுக-வின் வரலாறு-டி.எம். பார்த்தசாரதி
12. அலெக்ஸ்(தலித் ஆதார மையம்) அளித்த தகவல்கள்.


*டவுன்ஷிப் என்பது கோயில்*
*ஈஓ என்பவன் தெய்வம்*
*கைலி கட்டியவர்கள் உள்ளே வராதீர்கள்!*
**-மேகவண்ணன்**

## கள்ளப்பருந்து – கருடன் – கழுகு

மேகவண்ணன்

*அந்தப் பருந்து*
*முன்னம் ஒரு*
*ஆலமரத்திலிருந்தது*
*நிழலைத்தவிர வேறெதுவும் தராத*
*ஆலமரத்தில்*

*பின்னர் அது*
*அம்மரத்தின் வேர்களும், விழுதுகளும்*
*பொய்யானவை என்றது*
*அது உண்மைதான்*
*எனவே தளிரத் தொடங்கிய*
*ஒரு வேப்பஞ்செடியின்*
*கிளைகளில் அமர்ந்தது*
*ஆலமரம் பற்றிய உண்மைகளைப்*
*பருந்து*
*புட்டுப் புட்டு வைத்தது*

*வேப்பமரக்கிளிகள்*
*வியந்து கேட்கும்படியாக*
*வேம்பு பருந்துக்கு*
*ஆரோக்கியம் குறித்துச் சொன்னது*
*கோழிகளை அடித்துத் தின்பதை*
*பருந்து நிறுத்தவேயில்லை*
*படை நடுங்க வைக்கும்*
*பாம்புகளையே*
*நடுங்கவைக்கும்*
*கழுகு வம்சம் எனக்கருதி*
*பருந்து தொடர்ந்திருக்க*
*கிளைகள் அனுமதித்தன.*


*பின்னர்*
*கிளைகள் முறிய முறிய*
*பருந்தின் கனம் கூடிற்று*
*எனவே ஆலமரம் தான்*
*தானிருக்க இடம் என்று*
*அதற்குத் தோன்றியிருக்க வேண்டும்*
*மறுபடியும் போனது*
*வேறொரு ஆலமரத்தைத் தேடி*
*கருட வாகனம்*
*உற்சவர்களின் அலங்கார வாகனம்*
*என்பது*
*எல்லோருக்கும் புரியத்*
*தொடங்குகிறது*
*வேப்பமரக்கிளைகள்*
*பருந்தைத் தொலைத்தபின்னர்.....*
*........................*
*.........................*
*........................*



படிப்பகம்

www.padippakam.com




ஹவி

கேள்வி:

புல் காட்டிப் புதர் காட்டி
வைக்கோற்
போர் காட்டி நீர் காட்டி
எனை வருத்த
நானொன்றும் மாடல்ல மாடே !

பதில்:

முன் காட்டி முலை காட்டி
முன் குவளை விழி காட்டி
பல் காட்டிப் பரண் காட்டி
உனைப் பிடிக்க
நானொன்றும் பேயல்ல பேயே !

## கவிதை

ப்ரதீபா ஜெயச்சந்திரன்



படிப்பகம்

www.padippakam.com



# கடிதங்கள்.

மேகவண்ணன் அவர்களுக்கு,

வணக்கம். தங்களது புதிய தடம் என் 5 நண்பரிடமிருந்து கிடைக்கப் பெற்றேன். வழக்கமான சிற்றிதழ்களிலிருந்து மாறுபட்டிருப்பதை அறிந்தேன். இதழில் மார்க்சியத்தை கொச்சைப் படுத்தும் அதை ஐரோப்பிய வாதம் என்று கூறியும் உண்மையான மார்க்சியத்தை அராஜக வாதம் என்று கூறியும் புனிதப் பாசிசப் படையில் அணி சேர்ந்து, அப்பட்டமான முதலாளித்துவக் கட்சிகளான போலி கம்யூனிஸ்ட் கட்சிகளை ( இடது சாரிகளை ?) திரிபுவாதப் போராட்டங்களில் ஒளிந்திருக்கும் இந்துத்துவம் என்ற கட்டுரை அவர்களது புரட்டல்வாதங்களை அம்பலப் படுத்துகிறது.

இதழின் கடைசிக் கட்டுரையில் (கருத்துப் பட விமர்சனத்தில்) தனித் தமிழ், தமிழ் தேசியம் பற்றி கொஞ்சம் விரிவாக ஆய்வுக்கு எடுத்திருக்கலாம் என்பது என் விருப்பம். தமிழனுக்குள் தமிழ் முதலாளி, தமிழ்ப் பாட்டாளி என்ற சுரண்டும் சுரண்டப் படும் இரண்டு நேர் எதிரான வர்க்க நலன்களைத் தக்க வைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்காக போராடுவதானது இச் சுரண்டல் அமைப்பினைப் பாதுகாக்கும் கோட்பாடுதான்.

தங்களது இதழ் தொடர்ந்து பெற விரும்புகிறேன். புதிய தடம் 5க்கு முன்னால் உள்ள 4 இதழ்களையும் 5க்குப் பின் வந்த இதழ்களையும் வாங்க விரும்புகிறேன். ஆகையினால் இது குறித்த தெளிவான பதிலை தங்களது பதில் கடிதம் எனக்குக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். புதியதடம் ஓர் உண்மையான பாட்டாளிவர்க்கப் போர்வாளாகத் திகழ வேண்டும் என்பதே எனது விருப்பமாகும். தங்களது பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கும்

தோழமையுள்ள

---------------------------------------- யுகபாலன் ராசிபுரம்.

நண்பர் வழி தங்களின் சீரிய இதழ் புதிய தடம் (ஜுன் இதழ்) படித்தேன். அனைத்தும் மிகவும் நன்று. இதில் எந்தப் பக்கமும் வீணான பக்கமே இல்லை. கவிதைகள் மனதை சிந்திக்க வைத்தது. முற்போக்கும், மொழியும் நம் இரு கண்கள். இதனை செம்மையாகச் செய்யும் புதிய தடத்தை பெரிதும் வரவேற்று மகிழ்கிறேன். நல்லதையே கூறும் உங்கள் இதழ் அனைவரின் கைகளிலும் மிளிர வேண்டுகிறேன்.

---------------------------------------- ச. நாத்திக நந்தனார். சென்னை-48.

புதிய தடம் - 7 (ஜுன் 2000) கிடைத்தது. ஒட்டகங்களும் வாசனைத் திரவியங்களும் தலையங்கம் அவசியமான ஒன்று. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை மறு ஆய்வு செய்வது சரியா? தவறா? கட்டுரை எதார்த்த நிலைமைகளை எடுத்துரைப்பதாக அமைந்திருந்தது. சேது திரை விமர்சனம் சிறப்புரன கட்டுரை. கவிதைகளில் சில சிறப்பாக அமைந்திருந்தது. இதழின் கருத்துக்கள் சமூக விழிப்புணர்வூட்டும் இதழாக உள்ளது. இதழைத் தொடர்ந்து படிக்க ஆவல். அனுப்பி உதவுங்கள்.

---------------------------------------- கே.புஷ்பராஜ். கேப்பியார்.கனியக்காவிளை.

இனிய தோழமைக்கு,

வணக்கம். தடம் 7 கிடைத்தது. நன்றிகள். கட்டுரைகள், பிரகடனங்கள், திரைவிமர்சனம் போன்றவை அருமையாக இருக்கின்றன. எல்லாம் நன்றாக அமையட்டும் படைப்புகள் இன்னும் செறிவாக வரட்டும். தடம் போடும் பணியில் என்றும் நான் உடனிருப்பேன். நலம் கொள்க.

---------------------------------------- இலக்குமிகுமாரன் ஞானதிரவியம், தஞ்சை.

அன்புக்குரிய புதிய தடம் ஆசிரியருக்கு தோழமை நிறைந்த வணக்கம் !

அன்பு நண்பர் காரைக்குடி. ரோஜா சந்திரன் மூலமாக புதிய தடம் 5, 6, 7 வாசிக்கும் நல் வாய்ப்புக் கிடைத்தது. நன்றி !

சமுதாயத்தில் காலங்காலமாக ஒடுக்கப்பட்டு வரும் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் தங்களின் புதிய தடத்தின் கொள்கை பாராட்டுக்குரியது தான். இருப்பினும் தங்களின் ஒவ்வொரு இதழையும் திரும்பத் திரும்ப வாசித்தபோது ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்காக மட்டுமே குரல் கொடுத்து கட்டுரைகளும் கவிதைகளும் ஒரே மாதிரியாய் இருப்பது நெருடலாய் உள்ளது. அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை. கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாமே என்றுதான் கூறுகிறேன்.

ஏனெனில் மற்ற சிறுபான்மை இன மக்களின் வேதனைகள் துயரங்களைச் சொல்லலாம். அரசியல்வாதிகளின் போலித்தனம், அரசுத்துறை நிறுவனங்களின் ஊழல், லஞ்ச லாவண்யத்தின் அடாவடித் தனம், ஏழை எளிய மக்களை ஏமாற்றும் அரசின் போலி விளம்பரங்கள், சமத்துவபுர முறைகேடுகள், உழவர் சந்தையின் அவலங்கள், மருத்துவமனைகளின் கொடுமைகள் விலைவாசி உயர்வின் துயரங்கள் மண்ணெண்ணெய், கோதுமை, போன்ற ரேசன் பொருட்களின் விலை உயர்வுகள் அரசு அலுவலர்களுக்கு அள்ளிக் கொடுத்து நடுத்தர மக்களை நசுக்குவது. இன்னும் இன்னும் எத்தனையோ பிரச்சனைகள் எண்ணிலடங்கா கொடுமை, நடக்கிறது நாட்டில்.

அத்தனையும் தங்கள் பார்வையில் படாதது கொடுமைதான். இனி வரும் இதழ்களில் இந்த மாற்றங்களை எதிர்பார்க்கிறேன். மற்றபடி கவிதைகள் ஒவ்வொன்றும் அருமை! புதிய புதிய வார்த்தைகள், துணிச்சலான சிந்தனைகள் உணர்ச்சி மிகுந்த வர்ணிப்புகள். கவிதைகள் ஒவ்வொன்றும் என் நெஞ்சைத் தொட்டது.

புதிய தடம் 5, 6 உள்ளதைப் போல 7ல் விஷயங்கள் மிகவும் குறைவு. புருஷார்த்தம் கவிதை இன்னும் நெஞ்சுக்குள் நிற்கிறது. உலக்கைதான் கூட வரும் வரிகள் என் கண்களில் நீரை வரவழைத்து விட்டது. ஆஹா ஓஹோ என்று பேசப்பட்ட சேது படத்தை சரியானபடி விமர்சித்து இருந்தீர்கள். முடிந்தால் இயக்குனர் பாலாவிற்கு விமர்சனத்தை அனுப்பி வையுங்கள். விளக்கம் தருவாரா? விலகி நிற்பாரா என்று பார்ப்போம். மற்றபடி இதழின் மலர்ச்சிக்குப் பாடுபட்ட அனைத்து நண்பர்களுக்கும் என் இதயம் நிறைந்த பாராட்டுக்கள்.

---------------------------------------- கே. செல்வம், காரைக்குடி.

மனிதாபிமானத்தின் பேரால் - நன்றாக இருந்தது. பொதுவாகவே இலங்கைத் தமிழர்களின் கவிதை ஆர்ப்பாட்டமில்லாமலும், வலுவாகவும் காணப்படுகிறது. இதழ் நடத்துவது பெரிய விஷயம். அதைச் சிறப்பாகச் செய்வது பெரிய்ய விஷயம். நீங்கள் சிறப்பாகச் செய்கிறீர்கள். இன்னும் தரமுள்ளதாக்க உங்களால் முடியும். Layout - ல் கொஞ்சம் சிரத்தையுடன் செய்யுங்கள். நல்ல ஓவியங்கள் வேண்டுமானால் நண்பர்களிடமிருந்து வாங்கித் தர முயல்கிறேன். சில ஆலோசனைகளை முன் வைக்கிறேன் (உரிமையுடன்) எந்த இதழும் தனக்கான special feature - ஐக் கொண்டிருந்தால் விரைவில் identify கிடைக்கும். பணம் செலவு செய்து இதழ் கொண்டு வருவது முக்கியமல்ல. உங்கள் இதழ் சிறந்ததாகத் திகழ வேண்டும். நல்ல கட்டுரைக[ளை வா]ங்கிப் போடுங்கள். எல்லாப் புத்தகங்களுக்கும் விமர்சனம் எழுதத் தேவையில்லை. தகுதியற்றவற்றை ஒதுக்கி விடலாம். கவிதை[களி]லும் நல்ல selection கொண்டுவர முயற்சியுங்கள். உங்கள் கவிதையில் வேகம், கோபம் அதிகமாகக் காணப்படுகிறது. அது கொஞ்[சமு]ம் குறையாமல் நல்ல அழகியல் நுணுக்கங்களுடன் நல்ல கவிதையாக்கலாம். உங்களால் முடியும் செய்யுங்கள். ஒரு தெளிவான பா[ர்வை] இருக்கிறது உங்களிடம். அது நல்லது. அதை வளர்த்தெடுங்கள். வாழ்த்துக்கள்.

- பிரதீபா ஜெயச்சந்திரன். புதுவை.

www.padippakam.com



**கதவு**.காலாண்டிதழ்.கருத்தாளர் வட்டம். 5-36-4 ஆ, பாரதிநகர், மின்வாரிய குடியிருப்புகள் (கிழக்கு) அருப்புக்கோட்டை - 626 101.

**உறவு** கா.சே. பாலசுப்பிரமணியன் 6/5 கீழக்கொரட்டியார் தெரு, காரைக்குடி - 630 001 Ph:04565-36765

**ஆத்மா** - கவிதை இதழ் எம்.பி. வெங்கட்ராஜ் 52. காந்திபுரம் - 3 மேட்டுப்பாளையம் - 641 301 கோவை மாவட்டம்

**நாளை விடியும்** 4/7 முருகன் இல்லம் பாரதிபுரம் முதல் தெரு கைலாசபுரம், திருச்சி-14

**சங்கமம்**-பல்சுவை இதழ் 1A பள்ளிவாசல் தெரு இராமேசுவரம் - 623 526

**மக்கள் களம்** எம்.ஜே. நாயகம் 21டி/1 திருக்கழுக்குன்றம் ரோடு செங்கல்பட்டு - 603 002.

**புதிய காற்று** (1முதல் 11இதழ்கள்) B.முருகன் 41A சண்முகம்பிள்ளை 2வது தெரு அழகரடி, மதுரை -16

**வேம்பு** செய்யாள் சேய் 7/19 பி நடேசம் அத்திவெட்டி - அஞ்சல் பட்டுக்கோட்டை வட்டம் தஞ்சை மாவட்டம் - 614 613

**தமிழ் தேசம்** அறை எண் 1.முதல்மாடி 42 என்.எஸ்.கிருஷ்ணன் சாலை (ஆற்காடு சாலை) வடபழனி, சென்னை - 26

**ஏழைதாசன்** எஸ்.விஜயகுமார், 26 அடப்பன்வயல் 8வது வீதி, புதுக்கோட்டை-622 002

**தென்செய்தி** பழ. நெடுமாறன், 17/1 நரசிம்மபுரம், மயிலை,சென்னை- 600 004

**சிந்தனையாளன்** 19, முருகப்பா தெரு(மாடி) சேப்பாக்கம், சென்னை-5 தொ.பே: 8522862

**காஞ்சனை ரீல்** காஞ்சனை திரைப்பட இயக்கம், 31B,மாணிக்கஞ்சார நாயனார் தெரு, பாளைச்சந்தை, திருநெல்வேலி-627 002

**மன்னர் மலர்**, டாக்டர் குருசாமி சித்தர், 10/2 நால்வர் நகர் பாரதியார் பல்கலைக்கழகம் அஞ்சல் கோயமுத்தூர் - 641 046

**வேர்கள்** - அரிமாவளவன் 10 அ 3 வாத்துக்காரத் தெரு, உறையூர், திருச்சி - 3.

**எக்ஸில்** (இதழ் எண் 8,9) EXIL. B.P - 204. 92604 ASNIERES CEDEX. FRANCE

**உயிர்நிழல்** ( VOL III -NO1 - ISSUE 11) EXIL. 27, RUE JEAN MOULIN 92400 COURBEVOIE, FRANCE.

**புதிய தடம் கிடைக்குமிடங்கள்**

சிறைக்காற்று வெளியீட்டகம். 10, ஔவையார் சாவடி தெரு. எல்லீசு சாலை சென்னை -2

எழுத்து மயூரா வணிக வளாகம் 48 தானப்ப முதலி தெரு. மதுரை. தொலைபேசி 749134

இலக்கிய வட்டம். வெ. நாராயணன் 39 சி. காமாட்சியம்மன் சன்னதித்தெரு. காஞ்சிபுரம் - 631 502

பாரதி புக் ஹவுஸ். D-28,மாநகராட்சி ஷாப்பிங் காம்ளெக்ஸ் பஸ் ஸ்டாண்ட் (உட்புறம்) பெரியார் பேருந்து நிலையம். மதுரை - 1

தமிழ் இலக்கியக் கழகம். 49, பாரதியார் சாலை. திருச்சி

யாதுமாகி. லெனா குமார் 6,பர்வத சிங்கராஜ தெரு. திருநெல்வேலி - 627006

EXIL - B.P. 204 92604, ASNIERES CEDEX FRANCE

www.padippakam.com



# யுகம்

தலித் க.சுப்பையா

யுகம்
பழுப்புத் தோலின் பாஷை
MILLENIUM
வெள்ளைத் தோலின் மொழி.
புத்தாயிரம்
கலப்பினத் தோலின் சொல்.
கறுப்புத் தோலின் மொழி எது?
ஆண்டைகளின் அதிகாரத்தில்
அடிமைகளின் மொழி மௌனம்
ஊமைகளின் தலைவர்
அம்பேத்கர் நீடூடி வாழ்க.

படித்தோர்
பதவியிலிருப்போர்
பணம் படைத்தோர்
மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள
நட்சத்திர விடுதிகள்
நடன கிளப்புகள்
மதுபான குழுமங்கள்
முதலாளியம் அமைத்த தளங்கள்.
கோப்பை நிறைய மாமிசம்
நுரை வழியும் மது பாட்டில்

இரவைப் பகலாக்கிய பரபரப்பு
புத்தாண்டுக் கேளிக்கையில் நகரங்கள்

கொலைகள்
தற்கொலைகள்
விபத்துகள்
கொடிய நோய்கள்
ஏழைகள் வாழ்வில் நித்தம்

எளிய சனங்கள்
பாமரக் கூட்டம்
கவலைகளைப் பகிர்ந்து கொள்ள
தளங்கள் கிடையாது.
எங்களின் பார்வையில்
எண்கள் மாற்றமே புத்தாண்டு.

வீதியெங்கும் விளம்பரங்கள்
ஒளிவெள்ளத்தில் நகரங்கள்
வர்த்தகச் சூதாடிகள்
வாக்குச் சீட்டுத் திருடர்கள்

திரையுலகக் கழிசடைகள்
அரிப்பெடுத்தலையும் நடுத்தரவர்க்கம்
குடித்துக் கும்மாளமிட்ட இரவே
புதுயுகப் பொறுக்கிக் கேளிக்கைகள்
குப்பத்து சனங்கள்
குக்கிராமத்து மாந்தர்கள்
சேரிகளின் ஏழைகள்
எமக்கில்லை இந்த யுகக்கூத்து

கண்களில் நெருப்பு
கைகளில் ஆயுதம்
பறைகளின் அதிர்வுகள்
பழிதீர்க்கும் ஆவேசம்
வீதிகளில் அணிவகுப்பு
வெளியெங்கும் யுத்தம்
பதிவுகளாய் கொல்லப்பட்டோர்

இந்துக்களுக்கோ மரணபயம்
இந்தியா உடைந்து சிதறும்
ஆம் ! தோழர்களே
எல்லாம் தலைகீழாய் மாறும்
இது தலித்துகளின் காலம்.

## சூர்யமுகி

நள்ளிரவில்
  பேருந்து பயணம்

இருவரும்
  பேசிக்கொண்டிருந்தோம்

அவன்
  உறங்க ஆரம்பித்தான்

நான்
  விழிக்க ஆரம்பித்தேன்

# எதிர் அறி

இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்

தண்ணீர் வழிகிறது
மடையுடைந்து
விரட்டாதே . . . துரத்தாதே
சினமடைந்து

எம்பிக்குதிக்க
இதுவல்ல நேரம்
கரையுயரம் அதிகம்
விழுகின்ற இடத்திலும்
நீரில்லை . . . ஆளுண்டு

விரட்டாதே . . . மடக்காதே . . .
என்னை நீ தின்று
எத்தனை நாளிருப்பாய் . . . ?
வெற்றுத்தரைச்சட்டியில்
சூரியன் ஊற்றி
நமை

வறுத்தெடுக்கும் காலம்
இதோ வருகிறது

ஓடிவா . . . இணைந்துகொள்
மடைவழியே தப்பிப்போம் . . .
ஏற்வரும் தோழர்க்கெல்லாம்
இது உரைப்போம் . . .

வாய் பிளந்தலையாது
வா

படிப்பகம்

www.padippakam.com

# அறியமாட்டயா நீ

தய். கந்தசாமி

அன்றோர் அடர்மழை பொழுதில்
குடித்தெரு கூரை விளிம்பொன்றிலும்
ஒண்ட விடாது
வசவுகளோடு துரத்தப்பட்ட என் அப்பனை.

சாணியள்ளத் தாமதம்போல்
அற்பவெறியில்
ஆண்டைமார் கைத்தடம் பதிந்ததெம்
ஆத்தாளின் கன்னங்களை.

திமிறியெழும் புலர்வேளை
ஆற்றில் அழுத்தியும் விரைகள் நச்சியும்
உம் மறத்தகை மகளிராலும்
நிகழ்த்தப்பட்ட யெங்கள்
ஜலசமாதியும் சந்தேக மரணமும்
அறியமாட்டாயா நீ?
எனில் சொல்லத்தான் வேண்டும் நான்
எங்கள் மார்பிலுராய்ந்த
தேன்வண்ண வட்டங்களின் மையமாய்
நிமிர்ந்த உம் பெண்டிரின்
கருத்த முலைக்காம்புகள் பற்றியும்
மோனக் கிறுகிறுப்பில் யென்
முதுகு கீறிய நகங்கள் பற்றியும்
இன்ப உச்ச லயிப்பின் கனத்துளிகளில்
சிலிர்த்துச் சிலிர்த்தடங்குமவர்
முன்கை மென்மயிர் பற்றியும்

ஆகவே
அறிவுஜீவியுமான என் நண்பனே
விமர்சன வெறி கொண்டலையும்
உன் இசங்களின் குறிகளெதற்கும்
இசைந்ததாயில்லை யெங்கள்
இருப்பின் யோனிப் பொருத்தம்.



தசிச பதிவு எண் 213/01/1999.

படிப்பகம்